திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

ஏடு : 8 27-5-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 42

செல்வராஜ் — சுலோசனா திருமணம்

●

29-5-55 ஞாயிறு காலை 9-மணிக்கு ஈரோடு நேத்தாஜி வீதியிலுள்ள பெரியார் நகர் மன்றத்தில், பெரியார் அவர்களது தமையனார் திரு ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களின் இளைய மகனும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் இளவலுமான தோழர் ஈ. வெ. கி. செல்வராஜுக்கும், ஆனைமலை திரு ஏ. என் நரசிம்மன் அவர்களின் தமையனார் திரு ஏ என். சாமப்பனார் அவர்களின் மகள் தோழியர் சுலோச்சனாவுக்கும் வழக்கறிஞர் தே. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

அரசியல் அஞ்ஞானங்கள்!

வரலாறு அறியாமலேயே வரட்டுக் கூச்சல் போடுகின்றன!

திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம் ஆகியவைகளை குறிப்பிட்ட பொதுப் பிரச்னையில் ஒன்றுபடுத்தி பலம் வாய்ந்த எதிர்க் கட்சியாக அமைக்கும் முயற்சியில் இறங்கப் போவதாகவும், இது குறித்து முதன் முதலாக தி. க. தலைவர் பெரியார் அவர்களை ஏற்காட்டில் சந்தித்துப் பேச முடிவு செய்திருப்பதாகவும் சென்னை சட்ட சபை திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவரான தோழர். எஸ். சுயம்பிரகாசம், பி.ஏ.,பி.எல்., அவர்கள் பத்திரிகை வாயிலாக வெளியிட்டிருந்த விவரம், நேயர்கள் அறிந்ததேயாகும்.

இம் முயற்சியில் ஈடுபட்டு ஆவன செய்யுமாறு திராவிட முன்னேற்றக் கழகமோ, திராவிட கழகமோ அதுபோலவே தமிழரசு கழகமோ தோழர் எஸ். சுயம்பிரகாசம் அவர்களை உத்தியோக பூர்வமாகவோ அல்லது தனிப்பட்டோ வேண்டிக் கொள்ளவில்லை யென்பதையும் இம் மூன்று கட்சித் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் அறிவர். ஏனெனில் தோழர். எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் பத்திரிகை வாயிலாக தெரிவித்த விவரத்தில்கூட தாங்களாகவே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இப்பேச்சு வார்த்தைகளில் எவ்விதத்திலும் வெற்றியுறுவோம் என்று நம்புவதாகவும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் சொல்லப்போனால் காங்கிரசும்; திராவிட கழகங்களும் ஒன்று சேர்ந்தால் அதைவிட அபாரமான காரியம் உலகில் வேறு கிடையாது, எனவே அத்தகு முயற்சியில் ஈடுபடப் போகிறோம் என்று யாராவது கூறினாலுங்கூட அதைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை, அரசியல் துறையில் இவ்வித எண்ணங்களைத் தெரிவிப்பவர்களை யாரும் தடுத்துவிடவும் முடியாது. ஆனால் இப்படிக் கருத்தைத் தெரிவிப்பவர்கள் சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர்களா அல்லது கட்சிகளில் முக்கிய பொறுப்புடையவர்களா என்பதைக் கொண்டே இப் பேச்சுகளுக்கும் பத்திரிகையில் வெளிவரும் செய்திகளுக்கும் அவசியமாயின் பிறர் பதில் கூறலாம், அதுதான் அரசியல் ஞானம், நேர்மைப் பண்பு, பொறுப்புணர்ச்சி ஆகியவைகள் கொண்டதாகும்.

உதாரணமாக திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசு கழகம், ஆகியவைகளில் ஏதேனும் ஒரு கட்சியில் பொறுப்புடையவர்கள் இம்மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்த எதிர்கட்சி அமைய வேண்டும் எனக் கூறியிருந்தால் சம்பந்தப்பட்ட மற்ற கட்சிகளின் தலைவர்களோ அல்லது முக்கியஸ்தர்களோ அபிப்ராயம் கூறுவதென்றாலும் அதில் ஓரளவுக்காவது கண்ணியமும் அரசியல் ஞானமும் உண்டு என்று கருதலாம். இப்படி சொல்வதிலுங்கூட வார்த்தைகளை அளந்து உபயோகிப்பது தான் பொறுப்பை உணர்ந்தவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு மாகும்,

தோழர். எஸ். சுயம்பிரகாசம் அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிட பார்லிமெண்டரி கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின். நடவடிக்கைகளில் அதிகார பூர்வமான தொடர்பு கொண்டதல்ல என்பதை அரசியல் யூகம் ஓரளவாவது உள்ளவர்கள்கூட தெரிந்திருப்பார்கள்.

ஆனால் தமிழரசு கழகத் தலைவர் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு குறைந்த பட்ச அரசியல் ஞானங்கூட இல்லாமல் 'ஒன்று சேரும்' பிரச்னைபற்றி தத்துபித்தென பீத்தி யிருப்பது கண்டு வருந்துகிறோம்.

இம்மூன்று கழகங்களும் ஒன்று சேரும் முயற்சிகுறித்து '**மித்திரன்' நிருபர் ஒருவர் தோழர். சிவஞானத்தைக்** கண்டு அபிப்ராயம் கேட்டாராம்! அதற்கு தோழர். ம. பொ. சிவஞானமும் பதில் கூறும் வகையில் திராவிடக் கழகங்களை வெளுத்துக் கட்டிவிட்டாராம்!

தி. க., தி. மு. க., அமைப்புகள் வகுப்புவாத அடிப்படையில் அமைந்தவை என்பது வெளிப்படை. அந்த ஸ்தாபனங்கள் இந்தியாவிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்ட திராவிட நாட்டைக் கோருகின்றன. தமிழரசுக் கழகம் கோரும் தமிழரசு இந்தியக் குடியரசின் ஒரு அங்கமாக இயங்கக் கூடியதாகும். இப்படி அடிப்படை இலட்சியங்களில் மாறுபட்டுள்ள தி. க., தி. மு. கழகங்களோடு தமிழரசு கழகம் ஒன்றுபட்டு ஒரே ஸ்தாபனமாக ஆவதென்பது முடியாத காரியம். மற்றும் தமிழரசு கழகம் பார்லிமெண்டரி ரீதியில் இயங்கக்கூடிய அரசியல் கட்சியல்ல' என்று கூறியிருக்கிறார்.

தோழர் ம. பொ. சிவஞானத்தின் இந்த விமர்சனம்தான் அவருக்கிருக்கும் அரசியல் அஞ்ஞானத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது!

தனது கழகத்தின் தலைமைப் பொறுப்பை உணர்ந்தவராக ம. பொ. சிவஞானம் இருந்திருப்பாரானால் "ஒன்று சேரும் முயற்சி குறித்து பத்திரிகையில் படித்தேன்—என்னிடம் நேரில் இது பற்றி யாரும் அணுகவில்லை· அப்படி அணுகும்போது எனது கழகத்தின் எண்ணத்தை திட்டவட்டமாகக் கூறுவேன்' என்றோ அல்லது 'தமிழரசு கழகம் என்பது காங்கிரசுக்கு உட்பட்ட ஒரு உள்பிரிவேயன்றி அரசியல் துறையில் பார்லிமெண்டரி ரீதியில் இயங்கக் கூடிய ஒரு அரசியல் கட்சியல்ல' என்பதாகவோ கூறியிருந்தால் அரசியல் ஞானமும் மனவளமும் பொறுப்பும் உள்ள பதிலாகக் கருதப் பட்டிருக்கும்.

ஆனால் தோழர் ம. பொ. சிவஞானமோ குளிப்பதாகச் சொல்லி சேற்றைப் பூசிக்கொள்கிறார்! பரிதாபம் பரிதாபம். தலைகொடுக்கும் தமிழனின் 'மேல்மாடி' இவ்வளவு 'காலி'யாக இருக்குமென்று யான் கருதவேயில்லை. என்ன செய்வது சட்டியிலிருப்பதுதானே அகப்பையில் வரும்?

நிற்க (சிறைக்குச் செல்வதற்கு முன்னதாகவே சிப்பியைத் தயார் செய்து வைத்துக்கொண்டு) சிப்பி ஏந்தி சிறை சென்ற சிவஞானத்தின் கூற்றுப்படி திராவிட கட்சிகள் வகுப்புவாத ஸ்தாபனங்கள் என்பதாகவே ஒப்புக்கொள்வதானாலும், இந்த வகுப்புவாதத்திற்கு அவசியம் ஏன் ஏற்பட்டது அந்தக் கொள்கை வளர்ந்து வெற்றி பெறவும் செய்தது எதனால் என்பது அவருக்கே புரியவில்லை போலிருக்கிறது! புரியாதுதான்புரிந்துகொள்ளும் அறிவாற்றல் இருந்தால் அவசரக் குடுக்கை போல அபிப்ராயம் கூறுவாரா?

தட்டிக் கேட்க ஆளில்லாத காலத்தில் வகுப்பு வெறியர்கள் இந்நாட்டில் தங்கள் ஆதிக்க

11-ம் பக்கம்

சுயநலமிகளின் முகாம்!



காங்கிரஸ் இயக்கம் சுயநலமிகளின் முகாமாக மாறி வருகிறதென நேரு பண்டிதர் அண்மையில் டெல்லிக் கூட்டமொன்றில் முகாரிராகம் பாடி யிருக்கிறார்!

Best copy available

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

15

ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனி 1600-ல் துவக்கப்பட்டு இங்கிலாந்திற்கும் திராவிடத்திற்கும் வாணிபம் நடைபெற்று வரலாயிற்று. மற்ற மேலை நாட்டினின்றும் வந்த கிருத்துவப் பாதிரிமார்களில் கதோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாயிருந்தனர். கதோலிக்க மதத்தைப் பரப்புவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஆனால் ஆங்கிலப் பாதிரிமார்களிலோ ப்ராடஸ்டான்ட் மதத்தைச் சேர்ந்தவர்களே இருந்தனர். ப்ராடஸ்டான்ட் மதத்தைப் பரவச் செய்வதையே தம் குறிக்கோளாகவும் கொண்டிருந்தனர். இவர்களது நடவடிக்கைகள் துவக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒன்றுமில்லையென்றே தெரியவருகிறது. கம்பெனி அலுவல்களில் இருந்துவந்த அவர்களது இனத்தவர்களிடையேயும் கம்பெனி அலுவல்களில் சேர்ந்திருந்த சில திராவிடர்களிடையேயும் மதப் பிரசாரம் செய்வதற்கான முயற்சிகள் இப்பாதிரிமார்களால் மேற்கொள்ளப்பட்டன. கிருத்துவ மதத்தை திராவிடத்தில் நன்கு பரவச்செய்வதற்கென பலவித

ஆங்கிலேயரின் துவக்ககால கல்விப் பணி

மான முறைகளும் வழிகளும் இப்பாதிரிமார்களால் கையாளப்பட்டன. திராவிடச் சிறுவன் ஒருவனை தம் இங்கிலாந்து தேசத்திற்கு அழைத்துச் சென்று, அவனுக்கு கிருத்துவ பெயரிட்டு, கல்வி கேள்விகளில் சிறந்தவனாக்கி, கிருத்துவ மத போதனைகளில் வல்லவனாகச் செய்து, திராவிடத்துக்கே மீண்டும் அழைத்துவந்து கிருத்துவ மதப் பிரசாரம் செய்துவரச் செய்தனர். இவ்வரலாற்றை சிறிதளவாவது விரிவாகத் தெரிந்து கொண்டால் ஆங்கிலேயர்களின் அக்கால நடவடிக்கைகளின் விவரத்தை அறிந்து கொள்ள ஏதுவாகும்.

செயின்ட் ஜியார்ஜ் கோட்டையில் மதகுருவாக இருந்துவந்த மிஸ்டர் கூப்லண்ட் திராவிடப் பையன் ஒருவனுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுத் தந்தார். இப்பையன் தம் மதப் பிரசாரத்திற்கு உதவியாக இருப்பான் என்ற எண்ணத்தில் காப்டன் பெஸ்ட் என்பவருடன் லண்டனுக்கு அனுப்பி அங்கு மதப்பிரசார பயிற்சி பெற்று வரும்படி ஏற்பாடு செய்தார். 1614-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி இப்பையன் லண்டன் மாநகரைச் சேர்ந்தான். இப்பையனை தம் மத சம்பிரதாயப்படி கிருஸ்துவ மதத்தில் சேர்த்த சம்பவம் குறிப்பிட வேண்டியதாகும். அவனுக்கு ஆங்கில மொழியும் லத்தீன் மொழியும் போதிக்கப்பட்டன. கிருத்துவ மத வேத பாடங்களும் கற்பிக்கப்பட்டன. மதப் பிரச்சார பயிற்சியும் தேவையான அளவிற்குக் கொடுக்கப்பட்டது. 1616-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் தேதி பீட்டர் என்று ஆர்ச் பிஷப்பால் பெயரிடப்பட்டான்.

இப்பெயர் சூட்டுவிழா பெரும் குதூகலத்துடன் நடந்தது. லார்ட் மேயர், ஆல்டர்மென்கள், கிழக்கிந்தியக் கம்பெனி அங்கத்தினர்கள், மற்றும் பல கனவான்கள் கூடி இந்த விழாவை சிறப்பித்தனர். சர்ச் உள் முழுவதும் மக்கள் நிறைந்து விட்டனர். சர்ச்சிற்கு வெளியிலும் கூட்டம் சமாளிக்க முடியாத அளவு கூடிவிட்டது. இங்கிலாந்து அரசர் ஜேம்ஸ் அப்பையனுக்கு பீட்டர் என்று பெயர் சூட்டும்படிக் கூறினார். அரசரது விருப்பப்படியே அவனுக்கு பீட்டர் என்று பெயர் சூட்டப்பட்டது. கூடியிருந்த மக்கள் பெரும் ஆரவாரம் எழுப்பினர், தமது கிருத்துவ மதம் உலகம் முழுவதும் பரவி விட்டதாக பெருமைப்பட்டனர். இவ்வாறு பெயரிடப்பட்ட திராவிடப் பையன் தன் பெயரை லத்தீன் மொழியில் 'பீட்ரஸ் பேப்பா' என எழுதி வந்தான். இச்சிறுவன் திராவிடத்தில் எந்த ஊரைச் சேர்ந்தவன் என்று தெரியவில்லை சோழமண்டலக் கரையைச் சேர்ந்தவனென்றும், சென்னைக்கு அடுத்த கிராமப் பகுதியினின்று வந்தவனென்றும் தெரியவருவதால் தமிழ்ச் சிறுவன் என்று ஊகிக்க இடமுள்ளது. இவ்விவரங்களை ரெவரண்ட் பென்னி என்பார் தமது 'சென்னையில் சர்ச்' என்ற ஆங்கில நூலின்கண் கூறியுள்ளார்.

இதனின்றும் அக்காலத்தில் ஆங்கிலேயர்கள் தம் கிருத்துவ மதத்தை பரவச் செய்வதில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர் என்பதும், அதற்காகப் பலப்பல வழிகளை மேற்கொண்டு காரிய மாற்றி வந்தனர் என்பதும் தெரியவரும்.

ஆங்கிலேயர்கள் திராவிடத்திற்கு வந்தடைந்த காலத்தில் கர்னாடக நவாபுகளின் ஆட்சி செல்வாக்கு பெற்றிருந்தது. அரபு மொழி நாட்டின் மொழியாக சிறப்புற்றிருந்தது. ஆகவே ஆங்கிலேயர்கள் அரபு மொழியை கற்றறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாக அரபு மொழி பயிற்சிக்கென ஆக்ஸ்போர்டில் 1637-ம் ஆண்டில் ஆர்ச்பிஷப் லாட் (Laud) என்பவரால் அரபு மொழிப் பயிற்சிப் பகுதி ஒன்று நிறுவப்பட்டது. இந்த ஆக்ஸ்போர்ட் அரபு மொழிப் பயிற்சிப் பள்ளியில் ஆங்கிலேயர்கள் பயிற்சிப் பெற்றுவந்தனர். திராவிடத்தில் சுலபமான முறைகளில் கிருத்துவ மதப் பிரசாரம் செய்யப்படுவதற்காகவே இப்படிப்பட்ட சிரமங்களை மேற்கொண்டனர் ஆங்கிலேயர். 1659-க்குப் பின்னர் கம்பெனியாரின் கப்பல்களில் பாதிரிமார்கள் இலவசமாக ஏற்றிவரப்பட்டு திராவிடத்தில் இறக்குமதி செய்யப்பட்டனர். இப்படிக் கொண்டுவரப்பட்ட பாதிரிமார்கள் மதப் பிரசாரமே தம் நோக்கம் என்பதைக் காட்டிக் கொண்டனர், ஆனால் இவர்களது சுயநலத்திலும் பொதுநலம் ஒன்று ஏற்பட்டது என்பதுதான் இவ்விடம் நாம் குறிப்பிட விரும்புவது.

1673-ல் சென்னை செயின்ட் ஜியார்ஜ கோட்டையில் ஒரு நடுத்தரப் பள்ளிக்கூடம் துவக்கப்பட்டு ஆங்கிலேயர் போர்ச்சுகீசியர், யூரேஷியர் மற்ற சில திராவிடர்கள் ஆகியோரின் சிறுவர்கட்கு போர்ச்சுகீசிய மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இந்தப் பள்ளிக்கூடம் செயின்ட் ஜியார்ஜ கோட்டையில் இருந்துவந்த ஆங்கில அதிகாரிகளின் நேரடிப் பார்வையில் நடந்து வந்தது இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டது. ப்ரீங்க்ளின் என்பார் இரண்டாண்டு காலம் ஆசிரியராக இருந்தார். பின்னர் ரால்ப் ஆர்ட் என்பார் இங்கிலாந்தினின்றும் வந்து ஆசிரியர் வேலையை ஒப்புக்கொண்டார். இப்பள்ளியில் போர்ச்சுகீசியமொழியே பொதுமொழி

ஸ்வார்ட்ஸ்

யாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது ஏனெனில் அக்காலத்தில் சோழமண்டலக் கரையில் நாட்டு மக்களாலும் மேல் நாட்டவர்களாலும் வாணிபம் காரணமாக போர்ச்சுகீசிய மொழியே பொதுமொழியாகப் பயன் படுத்தப்பட்டு வந்தது. ரால்ப்ஆர்ட் ராஜினாமா செய்த பிறகு ஜான் பார்க்கர் என்பார் ஆசிரியரானார். 1692-ல் செயின்ட் ஜியார்ஜ கோட்டையின் முக்கிய அலுவலாளராக நியமிக்கப்பட்ட ஜியார்ஜ் லூயிஸ் என்பார் கல்விப் பற்றுடையவர். ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனி பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி இலவசமாக கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு யோசனை கூறினார். ஆனால் அவரது யோசனை ஏற்கப்படவில்லை. அவருக்குப் பின்னர் வந்த வில்லியம் ஸ்டீவன்சன் என்

உலகம் வியந்த திராவிடக் கல்வி முறை

பாரும் கல்வித் துறையில் நாட்டமுள்ளவரா யிருந்தார். இவர் லூயிஸ் அவர்களால் துவக்கப்பட்ட போர்ச்சுகீசிய மொழிப்பள்ளியை விரும்பவில்லை. ஆகவே தனி ஆங்கில மொழிப்பள்ளியொன்றைத் துவக்கினர். போர்ச்சுகீசிய மொழிப்பள்ளிகள் டேனிஷ் பாதிரிமார்களால் கவனிக்கப்பட்டு வரும்படி விடப்பட்டன.

ஸ்டீவன்சனின் பெரும் முயற்சியினால் அரசாங்கத்தாரின் நேர்ப்பார்வையிலும், அரசாங்க உதவியினாலும் ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடம் நடைபெறத் தொடங்கியது. 1715-ல் 'செயின்ட் மேரி இலவசப் பள்ளி' என்ற பெயரில் துவக்கப்பட்டப் பள்ளியை ஆட்சியாளரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியினர் நிர்வகித்து வந்தனர். கிழக்கிந்திய கம்பனியார் இப்பள்ளி முன்னேற்றம் அடைய வேண்டுமென விரும்பி தாமே அதன் நிர்வாகச் செலவை ஏற்று நடத்த முன்வந்தனர். இந்நூற்றாண்டின் கடைசியில் இப்பள்ளியானது கோட்டைக்கு வெளியில மாற்றப்பட்டு நடந்து வந்தது. இதுதான் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் திராவிட நாட்டில் கல்வித் துறையில் முதன்முதல் ஆற்றிய துவக்க கால வரலாறு ஆகும்.

இப்பள்ளிக்கூட நிர்வாகச் சட்ட திட்டங்களை சுருக்கமாகத் தெரிந்து கொள்வது நமது ஆரம்பக்கல்வி சீர்திருத்த பேச்சிற்குத் துணைபுரிவதாகும்.

முதன்முதலில் 30 ப்ராடஸ்டாண்ட் ஏழைச் சிறுவர்கள் படிப்பதற்கான இடத்தை ஏற்பாடு செய்து கொள்வது. இவ்வேழைச் சிறுவர்கட்கு இலவச உணவும் உடையும் அளித்து இலவசக் கல்வி கற்பிப்பது.

கிருஸ்துவ மதக் கல்வி முக்கிய இடம் பெறுவது.

ஐந்து வயது நிரம்பிய ஆண் பெண் சிறுவர் சிறுமிகளை சேர்த்துக் கொள்வது. 12 வயது வரை கல்வி புகட்டப்பட்டு பின்னர் வேலைகளில் அமர்த்திக் கொள்வது. எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் சிறுவர்கள் கற்பிக்கப்பட வேண்டியது. சிறுமிகள் கல்வியுடன் வீட்டு வேலைகளிலும் பயிற்சிக் கொடுக்கப்பட வேண்டியது.

இம்முக்கியமான விதிகள் கல்விக்கூடங்கள் எக்கரணத்தைக் கொண்டு நிறுவப்பட்டன யாருடைய நலனிற்காக நடத்தப்பட்டன என்ற விவரங்களைக் கூறுவனவாகும். ஆங்கில ஆட்சியாளர்களால் முதன் முதல் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடம் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதும், ஏழை எளியச் சிறுவர்கள் கல்வி பெற்று முன்னேற்றமடைய வேண்டும் என்ற பொதுநலக் கருத்துடன் நடத்தப்பட்டு வந்தது என்பதும் தெளிவாகத் தெரியவரும்.

மேற்கூறிய பள்ளிக்கூடம் நிர்வகிக்கப்பட்டு வந்த முறையும் குறிப்பிடத்தக்கதாகும், அரசினரின் உதவியைப் பெறுவதற்கு முன் இப்பள்ளிக்கூடமானது தர்ம எண்ணங் கொண்டவர்களின் உதவியால் நடைபெற்றுவந்தது. கோட்டை நிர்வாகத்திற்குட்பட்ட வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்புகளினால் வரப்பட்ட தொகையில் ஒருபகுதி இப்பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்திற்காகக் கொடுக்கப்பட்டது. நேர்மை தவறி நடந்த வியாபாரிகள் இப்பள்ளிக்கூட வளர்ச்சிக்காக பொருளுதவி செய்யும்படி தீர்ப்புக்கூறப்பட்டனர். வாரிசு இல்லாமல் இறந்துவிட்டவர்களின் சொத்துக்கள் கல்வி வளர்ச்சிக்காகவும் அனாதைக் குழந்தைகளின் பராமரிப்பிற்காகவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறெல்லாம் முயற்சி செய்து அக்காலத்து ஆங்கிலேயர்கள் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டனர். இவ்வாறெல்லாம் கூறியவற்றினின்றும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியர் கல்வித்துறையில் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அவர்களால் இந்த நாட்டில் கல்வி வளர்ச்சியடைந்துவந்த வரலாற்றுச் செயதிகளும் தெரியவரும்.

ஆங்கில அதிகாரிகளால் இப்படிப்பட்டக் காரியங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் சென்னை செயின்ட் ஜியார்ஜ கோட்டைக்கு வெளியிலும் கல்வி வளர்ச்சிக்கான காரியங்கள் நடைபெற்றுவந்தன. இக்காரியங்கள் வெற்றிகரமாக நடைபெறுதற்கு ஆங்கில அதிகாரிகள் தங்கள் உதவியை அளித்து வந்தனர். டேனிஷ் பாதிரிமார்களின் உதவியைக்கொண்டு சில சிறுவர் பள்ளிகளையும், அனாதைப் பள்ளிகளையும் நடத்த முன்வந்தனர். இப்பொதுத்

12-ம் பக்கம்

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ பி.டி. எழிலன்

சாருவாகர் சாதனை !

சாருவாகர் ஒரு பழுத்தப் பகுத்தறிவு வாதியாவார். முற்போக்கு எண்ணங்கள் மலிந்தவராகத் திகழ்ந்திட்டார். மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு கொள்வதையும் அவ்வேற்றத் தாழ்வைக் கொண்டு ஏய்த்துப் பிழைப்பதையும் வெறுத்தார். நம்மைத் தாங்கும் இப்பூமியும் நாம் நடமாடும் இவ்வுலகமும் மெய்யென்றும், நாம் இம்மண்ணுலகை நீத்தால் பிறகு ஒரு புகலிடம் உள்ளது! அதுதான் நல்லோருக்கு விண்ணுலகம், தீயோருக்கு பாதாளலோகம் என்னும் கூற்றை பொய்யென இடித்துக் கூறி பகுத்தறிவுப் பிரசாரம் செய்து விளங்க வைத்தார்.

மனிதனிக்கு அறிவே கடவுள்! அவ்வறிவை நல்வழியில் செலுத்த நினைப்பதுவே கடவுள் பிரார்த்தனை! எவருக்கும் தீங்கிழைக்காது ஏனையோருக்கும் நல்லது செய்திடலே கடவுள் வழிபாடு! பிற உயிரை தன்னுயிர் போல் நினைத்துப் போற்றிடுதலே கடவுள் வணக்கம்! என்பனபோன்ற அறிவுரைகள் பயின்று மதப்பித்தர்களின் மாய்கையிலிருந்து மக்களை விடுவித்த உத்தமனாகத் திகழ்ந்திட்டார் சாருவாகர்.

அறிவே கடவுள்! அன்பே கடவுள்! மெய்மையே கடவுள் என்று கூறி மக்களைத் தெளிவடையச் செய்துவிட்டால் நம் பிழைப்பு என்ன ஆவது? நம் தொந்தி சுருங்குவதா? நம்மேனி குலைவதா? வந்தது பேராபத்து! என நினைத்து புரோகிதக் கூட்டங்கள் சாருவாகர் உயிருக்கே உலை வைக்கத் திட்டமிட்டார்கள்,

நமக்கோ நிலந்திருத்தத் தெரியாது. தர்ப்பை ஏந்தி தரணியை பணியவைக்கும் இக்கைகள் ஏர் பிடிப்பதா? நெய்தல் தெரியாது! புராணங்களைப் புரட்டிக காட்டி புரட்டுரைகள் புகன்று பணந் திரட்டும் இக்கைகள் தறி அடிப்பதா? தொழிலேதும் செய்து பிழைக்க வகையற்றவர்கள், தொந்தி சுமக்க வேண்டிய நாம், பொதி சுமப்பதா? உடம்புதான் வளையக் கூடிய உடம்பா! உண்டு கொழுத்து சந்தன மெழுகுடன் திகழ வேண்டிய நம் மேனி வியர்வை ஒழுக்கால் அசடு வழியவிடுவதா! வேதம் ஓதுதலையும், ஓதுவித்தலையும் விட்டுவிட்டால் நம் நளின வாழ்க்கைக்கு வெடிவைக்கும் சாருவாகரை விட்டுவைக்கத்தான் முடியுமா? என்று நினைத்து புரோகிதக் கூட்டம், சாருவாகருக்கு என்னென்ன தொந்தரவுகள் கொடுக்க முடியுமோ அவ்வளவும் செய்து தீர்த்தார்கள்.

ஓர் பார்ப்பனன் கைத்துப்பாக்கியால் நம் காலத்து காந்தியார் உயிரே பறிக்கப்பட்டதை நினைத்தால் அக்காலச் சாருவாகர், புரோகிதக் கூட்டத்தோடும் ஆரியப் பிடுங்கள்களோடும் எத்தகைய எதிர்நீச்சல் கொண்டிருப்பார் என்பதை நாம் நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

யாகத்தின் சூதுதனை அம்பலப்படுத்திட்டார். ...தி என்னும் ஐதீகத்தில் பொதிந்து கிடக்கும் சதித்...திட்டங்களை மக்கட்கு எடுத்துக் காட்டினார். ஆக...ங்கள், ஆராதனைகள், ஆச்சாரங்கள் அத்தனையும் ...டைந்தெடுத்த ஏமாற்றுத் தந்திரங்கள் என ...டித்துக் கண்டித்தார். புல்லுக்கும் புல்லர்களுக்...ம் பயப்படத் தேவையில்லை என்ற உணர்வை ...ட்டினார். இவ்வாழ்வே நிஜம்! மறுவாழ்வு உண்...டென்றுரைப்பது உன்மத்தர்களின் ஏய்த்தல் ...ழைப்பு. உடல்தான் இறந்துபடும், அதிலுள்ள ...த்மா அழிவற்றது, அது வேறு உடலில் குடி...கொண்டு புனர்ஜென்மம் அடைகிறதென்பது ...த்தனையும் அண்டப் புளுகு! ஆகாயப் புரட்டு! ...தைநம்பி இவ்வாழ்வை பாழ்படுத்திச் சாகாதீர்கள் ...ன எச்சரித்தார். ஆக அவர் ஒரு பெரிய பகுத்தறி...ச் சூறவளியாகத் திகழ்ந்திட்டார். ஆங்கிலத்தில் ...மெடீரியலிஸ்ட்' (Materialist) என்று கூறுவார் ...ள். அதாவது அவர் பெரிய லோகாயுதவாதி ...ல்லது பொருள் முதல்வாதியாவார்.

அவர் பெண்ணின் பெருமையைப் பேணுபவர் ...ன்பதை நாம் முன்னமே அறிந்தோம் பெண்ணி...த்தையே உய்வித்த உத்தமராவார்.

ஏழைகளின் தோழன்—பகுத்தறிவுப் பகல...ன்—புரோகிதத்தின் பகைவன்—வரட்டு வேதத்...ன் வைரி—சாருவாகர்.

அந்தலையப் பகுத்தறிவுப் பிழம்பை, அந்தோ! ஆரியம் உயிரோடு எரியூட்டிக் கொன்றதே! ஜோன்—ஆஃப்—ஆர்க்கை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தியதைப் போன்று சாருவாகரையும் தீய்த்தார்கள்,

சாருவாகர் தீய்ந்தார்! தீர்ந்து போனார்! ஆனால் சாருவாகர் கொள்கைகள் தீய்ந்தனவோ? தீர்ந்து போயினவோ?

சாக்ரட்டீஸ் விஷம் ஊட்டப்பட்டு மாண்டார். ஆனால் அவரது தத்துவங்கள் மறைந்தனவோ?

சாருவாகரை மட்டுமா தீய்ந்தார்கள்! அவர் எழுத்துக்களையும் பொசுக்கினார்கள்! எனினும் அவரது கொள்கைகள் இன்றுந் தழைத்தோங்கி நிற்கவில்லையா?

அவை இன்று நம்மிடை பெரியார் வடிவத்தில் தழைத்து நிற்கின்றனவன்றோ?

தேசீய மொழியாம் தேசீய மொழி!

வளமிழந்த இந்தி மொழியே! நீ முதலில் வளம் பெறு! ராஜாஜி சொல்வதைப்போல் பள்ளிக்கூடம் படித்து விட்டுவா! பிறகு பார்த்துக் கொள்ளலாம் இந்திய—தீசிய மொழி ஆவதற்கு! கால்வாய் தாண்டக் காலில்லை; கடலை எங்ஙனும் தாண்ட முடியும்?

மே 12-ம் நாள் புதுதில்லியில் பொருட்காட்சி சாலைக்குக் கால்கோல் விழா நடத்தியபோது நேருஜி சொன்னதையும் கேட்டு வைத்துக் கொள்!

பொருட்காட்சிச் சாலையை உன் மொழியில் கூறப் பிரயத்தனப்பட்டார்கள்! ஆங்கில மொழியில் வழங்கிடும் 'மியூசியம்' (Museum) நீசமாம்! கூடாதாம்! ஆனால் உன்மொழி என்ன வாழுகாம்? 'ஆஜ்யாப்கர்' என்றார்கள். பொருட்காட்சிசாலை என்ற அர்த்தம் அதிலில்லை என்றுத் தள்ளிவிட்டார் நேருஜி. மவுலானா ஆசாத் 'ஜாதுகர்' என்றார். இது 'ஆஜயாப்கர்'ஐவிட மிகமிக மட்டம். சரியான பொருளில் இல்லை என்று அதையும் உதறிவிட்டார். இந்தியில் 'மியூசியம்' என்ற சொல்லுக்கு நேர் பொருத்தமானப் பதமில்லை என்று ஏதோ ஒருவாறு 'சங்கிரஹாலயா' என்று சொல்லி பேச்சை ஓட்டி நிறுத்தினர்,

இந்திய தேசீயப் பொருட்காட்சிச்சாலை ஒன்றை நிறுவ, புதுக்கட்டிட மொன்றைப் புது தில்லியில் கட்டி வருகிறார்கள். மூன்றடுக்கு மாடிக் கட்டிடமாகத் திகழும். அதைக் கட்டி முடிக்க இரண்டாண்டுகள்வரை ஆகும். அதற்கு அஸ்திவாரக் கல்லை இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு மே 12-ம்நாள் நாட்டுவித்தார்.

இரண்டாண்டிற்குப் பிறகு அது ஒரு சிறந்தப் பொருட்காட்சிச் சாலையாக விளங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இளகிய மனம் !

'இருப்பு மனிதர் 'வல்லபாய் படேல்! அவர் இட்ட ஒரே கட்டளையில் 500-க்கு மேற்பட்ட அத்தனை இந்திய சமஸ்தானங்களும் கலைக்கப்பட்டு இந்தியாவுடன் இணைந்தன! அச்செயலைப் போற்றுவான் வேண்டிப் படேலை, இந்திய நாட்டுப் 'பிஸ்மார்க்' என்றழைத்தார்கள்!

சில சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைய மறுத்துச் சண்டித்தனம் செய்து பார்த்தன! ஒன்றும் சாயவில்லை!

அப்படிச் சண்டித்தனம் செய்ததில் ஹைதராபாத் சமஸ்தானமும் ஒன்று!

ராணுவ நடவடிக்கையைக் கொண்டுதான் ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைக்க நேர்ந்தது.

பெரியார் ஆணைப்படி அதுசமயம் சென்னையில் தொண்டை மண்டலத்து துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி முன் இந்தி எதிர்ப்பு அறப்போர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்று வந்தது. ஹைதராபாத்தில் ராணுவ நடவடிக்கையின் நிமித்தம் இந்தி அறப்போரை சற்று நிறுத்தி வைத்துப் பிறகு நடத்தி வைத்ததும் நினைவிலிருக்கலாம்.

மன்னர் பதவியை இழந்த நிஜாம், பிறகு ஹைதராபாத் ராஜப்பிரமுகராக நியமிக்கப்பட்டார் இப்போதும் அப்பதவியை வகிக்கிறார்.

நிஜாம் ஒரு பெரிய 'கோடீஸ்வரர்'! நிலபுலன்கள் நிறைய உடையவர்!

பணம் பெருத்தவரானாலும் குணங் கொண்டவராகவுங் காணப்படுகிறார்.

நிஜாம் பலதாரங் கொண்டவர்! அவரது மனைவிகளில் ஒருவர் லைலா பீகம்! அந்த அம்மையாரை உஸ்மானியா மருத்துவ நிலையத்தில் ஒரு பெரிய இரணசிகிச்சைக்காகச் சேர்த்தார்கள். இரண சிகிச்சை நடைபெற்று அங்கே குணமாகி வருகிறார்.

மனைவியை காணச் சென்ற மருத்துவ மனையில் ஓர் தோழரைக் கண்டார். இரண சிகிச்சையால் ஒரு காலும் ஒரு கையும் வெட்டி எடுக்கப்பட்டு சுருண்ட நிலையில் படுத்து வாதனைப்பட்டுக்கொண்டிருந்தார் அத்தோழர்!

பரிவும் இரக்கமுங் கப்பியவராய் தோழரை அணுகினார். கனிவுடன் தோழரின் கதியை வினவினார்.

கலியாணமானவர்! குழந்தைகள் இருவர்! பரம ஏழை. பூனா மருத்துவ நிலயம் சென்று மேற்கொண்டு சிகிச்சை பெற்று 'போலிக்கால்' 'போலிக் கை'யையாவது பெற்று நடமாடக் கையிலே செப்பாலடித்தக் காசுமில்லை—எனக் கேட்ட காருண்ய குணம் படைத்த நிஜாம் கண் கலங்கினார். மனம் நெகிழ்ந்தார். உடனே கையிலிருந்த ஆயிரம் ருபாயை எடுத்து அத்தோழருக்கு வணங்கி பூனா சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பச் சொன்னார்.

போலிக் காலையும் கையையும் பெற்றப் பிறகும் அத்தோழர் வாழ வகையில்லை என்றால் மேற்கொண்டும் பொருளுதவி அளிப்பதாக வாக்களித்தார்.

என்னே நிஜாமின் கருணை! நிஜாமின் அரும் பெருங் குணத்தைக் கண்டும் கேட்டும் அனைவரும் மகிழ்ந்தனர்.

நிஜாம் பாதையில் ஏனைய பணம் படைத்தச் சீமான்களும் சென்றிட்டால் நாடு எத்துணை நலம் பெறும்!

எழுவரால் ஏழ்மைதான்!

நம்நாடு உண்மையிலேயே ஏழ்மை கப்பிய நாடுதானா? நம் வயிற்றைக் கழுவ பிறநாட்டான் உதவிக்கு கைநீட்ட வேண்டியவர்கள்தானா நாம்!

கண் ஆஸ்பத்திரி, பிள்ளைபெறும் ஆஸ்பத்திரி, க்ஷயரோக ஆஸ்பத்திரி போன்றவைகளை மக்கள் நலங்கருதிக் கட்டப் பொருளற்றவர்களா நாம்!

ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் போன்ற கல்விச்சாலைகளைக் கட்டி நடத்த வகையற்றவர்களா நாம்!

தொழிற்சாலைகளை நிறுவத்தான் முடியாதா? எண்ணற்ற வேலையற்றோர் பட்டாளத்தை வாழ வைக்கத்தான் முடியாதா!

கிராம, நகர் அபிவிருத்தியை மென்மேலும் பெருக்க முடியாதா!

எதை நம்மால் செய்து காட்ட முடியாது? நம்மிடம் பொருளா இல்லை!

'திராவிடன்' தெற்றென எடுத்துக் காட்டிற்றே! செங்கல்பட்டு, சென்னை, தென்ஆற்காடு, வடஆற்காடு, தஞ்சாவூர் முதலிய மாவட்டங்களில் உள்ள பெரிய கோயில்களின் நகை முதலியவற்றின் மதிப்பு ரூ. 49,36,098—10—0 என்று! இதோடு மதிப்பிடவே முடியாத மதுரை கோயில்களின் நகைகள், சொத்துக்கள்—இராமேசுவரம்—ஸ்ரீரங்கம்—திருப்பதி முதலிய கோயில்களின் சொத்துக்களையும் கணக்கிடவே முடியாது! அவ்வளவும் வீணாகவல்லவோ முடங்கிக் கிடக்கிறது! விழா என்கிற பெயரில் விரயமாக்கப்பட்டு வருகிறது!

அப்பொருளைக் கொண்டு நாட்டை வளமாக்க முடியாதா!

அவையெல்லாம் போதாவென்று சென்னை கவர்னர் பங்களாவில் 'காந்திக் கோயில்' பல இலட்சம் ருபாய் செலவில் எழும்புகிறது!

காந்தியார் உயிருடனிருந்தால் விரயம்! விரயம்!! விரயம்!!! எனக் கண்டித்துப் பேசியிருப்பார் அதை நிறுத்தி ஆசிரமம் நடத்திக் குடிசைத் தொழிலைப் புகுத்தி, மக்களை வாழவைத்திருப்பர். கோயில் கட்டாதே எனக் கண்டித்தல்லவோ மறைந்தார் காந்தி!

நாட்டின் ஏழ்மையில் பஞ்சத்தில், படிப்பின்மையில், நோயால் மக்கள் மடிந்திடும் பரிதாபத்தில் நாட்டங் காட்டுபவர்களாய் இருந்தால் கோயில் கட்டுவார்களா! கோயில் ஒரு கேடா என்று நினைக்க மாட்டார்களா!

8-ம் பக்கம் பார்க்க

திராவிடன்

சென்னை : 27—5—55 : வெள்ளி

மாநில மாநாடு

●

திராவிட முன்னேற்றக் ககழ மாநில மாநாடு சிறப்புடன் நடைபெற கழகத் தோழர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைக் குறித்து இதற்கு முன்பு இருமுறை நமது எண்ணத்தை வெளியிட்டிருந்தோம். அண்மையில் நடைபெற்ற பொதுக்குழுவிற்குப்பிறகு, மாநில மாநாடு எப்போது நடைபெறும் தேதி ஏன் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை யென்றெல்லாம் கழகத் தோழர்களும் அனுதாபிகளும் விவரம் கேட்டு தினசரி பல கடிதங்கள் எழுதிவருகின்றனர். இவர்களின் ஆர்வத்தைக் கண்டு நாம் பூரிப்படைகிறோமெனினும் மாநில மாநாடு நடத்துவதென்றால் அதற்காகவேண்டி பணவசதிகளைப்பற்றிக் கழகத் தோழர்களுக்கு குறிப்பாக கிளைக் கழக நிர்வாகிகளுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கனவே விளக்கமான வேண்டுகோளை விடுத்திருப்பதைவிட நாம் அதிகம் கூறுவதற்கில்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய நாளிலிருந்து இதுவரை சிற்றூர் மாவட்டக் கிளைகளின் கழக நிர்வாகிகளும் தோழர்களும் கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க பல அரிய சாதனைகளை நிறைவேற்றியிருப்பதற்கு உற்ற துணையாக இருந்துவருவது எந்தத் தனிப்பட்ட ஒரு பணம் படைத்தவரின் உதவியோ ஆதரவோ அல்ல. அதற்குப் பதிலாக ஏழை—நடுத்தர மக்களின் மனத்தூய்மையான ஆதரவும் பொருளுதவியும்தான் சிறு துளி பெருவெள்ளம்போல திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலையாய உதவியாய் இருந்து வருகிறது. இவ்வுண்மையை நமது மாற்றுக் கட்சியினரும் மனமார ஒப்புக் கொள்வர்.

எனவே தி.மு. கழக இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுவதற்காக சென்னைப் பொதுக் குழுவில் அந்தந்த மாவட்டங்களின் சார்பாக செயலாளர்கள் அளித்த வாக்குறுதியை, அதாவது மாவட்டங்களின் பங்கீட்டுத் தொகையை வசூலித்து கூடுமான அளவு விரைவில், பொதுச்செயலாளரிடம் சேர்ப்பித்தால்தான் மாநில மாநாட்டின் பணியினைத் துரிதப்படுத்தவும் தேதியை உறுதிப்படுத்தவும் மாநில மாநாட்டு வர்வேற்புக் குழுவினருக்கு உற்சாகமும் வசதியும் உண்டாகும்.

மாவட்டங்களின் பங்கீட்டுத் தொகையை வசூலிக்க ஒவ்வொரு மாவட்டக்கிளையும் தீவிர முயற்சி எடுத்து ஆவன செய்து வருவதை நாம் அறிவோம் எனினும் மாவட்டங்களிலுள்ள கிளைக் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் தீவிர முயற்சியில் ஈடுபட்டால் நிதி வசூலிக்கும் பணி விரைவில் வெற்றிகரமாய் முடியும் என்பதை கிளைக் கழக நிர்வாகிகளுக்கும் பணிவன்புடன் நினைவூட்டுகிறோம்.

மாநில மாநாட்டில் முக்கியமான முடிவுகளை எடுத்து அதற்கேற்ப தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்ற கொள்கை உறுதி படைத்த கழகத் தோழர்கள் அனைவரும் மாநில மாநாட்டு நிதிவசூலை இன்னும் இரண்டொரு வாரங்களுக்குள்ளாக திரட்டித் தந்து மாநாட்டின் வரவேற்புக் குழுவினருக்கு பேருதவி புரிய வேண்டுகிறோம். அதுபோலவே கழக அனுதாபிகளும் ஏனையோரும் மாநில மாநாட்டின் நிதியளிப்புக்கான உதவிகளைத் தாமதமின்றி செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தி. மு. கழகமும் பொதுத் தேர்தலும்

●

அறிஞர் அண்ணாவின் விளக்கம்

"தி. மு கழகத்தினர் மாநில மாநாடு நடத்துவதால் என்ன பயன் என்று சிலர் கேட்கின்றனர். அவர்களுக்கு நான் கூறுவேன். இம்மாநில மாநாட்டில் பல முக்கிய முடிவுகளைச் செய்ய நாங்கள் விரும்புகிறோம். மக்களிடையே தி. மு. கழகக் கொள்கைக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்பதை திட்டவட்டமாக அறிந்து கொள்ளப்போகிறோம். சுருக்கமாகச் சொன்னால் ஜனநாயக முறைகளை மேலும் கையாள மாநாடு முடிவு செய்யும்.

அண்ணாதுரை கட்சியினர் தேர்தலுக்கு ஏன் நிற்கவில்லை யென்று சிலர் கேலி பேசுகிறார்கள்! மற்றும் சிலர் அக்கரையோடு கேட்பதாக பாவனை செய்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்வது இது தான். என் மாஜி நண்பர்களே, தேர்தலுக்கு சுவரொட்டித் தாள்களைக் கூட அடிக்க பணம் கிடைக்காததால்தான் அண்ணாதுரையும் அவரின் கட்சிக்காரர்களும் தேர்தலுக்கு நிற்க சற்றுத் தயங்குகிறார்களேயன்றி யார் எதிர்ப்பார்களோ யார ஆதரிப்பார்களோ, ஆதரிக்கமாட்டார்களோ என்ற அச்சத்தால் அல்ல.

திருச்சியில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டில் தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுவதா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவு செய்யப்படும். இந்த முடிவைக்கூட ஜனநாயக முறைப்படியே செய்யப்போகிறோம்.

மாநாட்டுக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே வருபவர்களிடம் டிக்கட்டுடன் ஓட்டுச் சீட்டுகள் கொடுக்கப்படும். அந்த ஓட்டுச் சீட்டில் தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுவதா வேண்டாமா, திராவிட கழகத்துடன் இணைந்து போட்டி போடுவதா அல்லது தனியாகப்போட்டி போடுவதா என்று ஓட்டுச் சீட்டில் அச்சடிக்கப் பட்டிருக்கும். அந்த கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையில் ஓட்டுச் சீட்டில் தேவையான இடத்தில் பூர்த்தி செய்து ஓட்டுப் பெட்டிக்குள் போட வேண்டும். இதற்காக மாநாட்டில் இரண்டு பெரிய ஓட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். மாநாட்டின் கடைசி நாளன்று தேர்தல் முடிவு அறிவிக்கப்படும்.

என்று அண்ணா அவர்கள் 24—5—55 மாலை 6 மணிக்கு மாநில மாநாட்டின் சென்னை மாவட்ட பங்கீட்டுத் தொகைக்காக சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் தோழர் கே. எ. மதியழகன் அவர்கள் தலைமையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். இச்சிறப்புக் கூட்டத்திற்கு நன்கொடை டிக்கட் மூலமாக வசூலானதில் கூட்டச் செலவுபோக மிகுதி ரூ. 1008—4—0. என செயலாளர் இளம்பரிதி அறிவித்தார்.

வேதங்களின் வண்டவாளம்

●

பகுத்தறிவியக்கத் தோழர் விவேகி அவர்களால் வரையப்பட்ட 'வேதங்களின் வண்டவாளம்' என்னும் ஆராய்ச்சிமிக்க நூலை சென்னை அரசியலார் 'கிரிமினல் புரொஸீஜர்கோடு செக்ஷன் 99—எ' பிரிவுப்படி தடை விதித்திருப்பதோடு அதன் பிரதிகள் முதலியவற்றையும் பறிமுதல் செய்யும்படி போலீஸ் அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறதாம்.

வேதங்களின் வண்டவாளம் என்னும் நூலில் ஆரிய, கிருஸ்துவ; இஸ்லாமிய மதங்களிலுள்ள குறைபாடுகளை தோழர் விவேகி எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆனால் இக்குற்றச்சாட்டுகள் அவரின் சொந்த சரக்கல்ல. மதங்களைக் குறை கூறவேண்டுமென்ற எண்ணத்தாலேயே எழுதப்பட்டதுமல்ல.

உலகப் பேரறிஞர்களென போற்றப்பட்டவர்கள் இம்மதங்களிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டியதை அடிப்படையாக வைத்தே தோழர் விவேகி வரைந்துள்ளார். அவ்விதமிருந்தும் அரசியலாருக்கு தோழர் விவேகியின் நூல் வேதனையைத் தருவது ஏனோ! அதுமட்டுமல்ல, மத நூல்கள் என்பவைகளே மதத்தையும் கடவுள்களையும் பழிப்பதா யிருப்பன அரசியலாரின் கண்களுக்கு புலப்படவில்லை, ஆனால் தோழர் விவேகி போன்றவர்கள் வரையும் ஆராய்ச்சி நூல்களின் மீது பாணம் தொடுப்பதில் சர்க்கார் தங்களின் அபார திறமையைக் காட்டுகின்றனர்.

தோழர் விவேகி அவர்கள் வரைந்துள்ள நூலின் சில பிரதிகளை ஆட்சியாளர் தடைவிதிக்கலாமேயன்றி அந்நூலின் வாயிலாக மக்கள் மனதில் பதிந்துள்ள அறிவுச்சுடரை அசைத்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இனியாகிலும் அரசியலார் அறிவு உணர்ச்சிக்கு தடையாய் இருக்க வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

தூத்துக்குடியில் பொதுச்செயலாளருக்கு மகத்தான வரவேற்பு

29—5—55 ஞாயிறு மாலை 7 மணிக்கு தூத்துக்குடி தருவை மைதானத்தில் நகர தி மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் நெல்லை மாவட்ட நிதிஅளிப்பு நிகழ்ச்சியும் நடைபெறும். மாலை 3 மணிக்கு மாபெரும் ஊர்வலமும் நடைபெறும். (பிறவிவரம் 8—ம் பக்கம் பார்க்க).

வேட்டவலம் தி. மு. க.

28—5—55 யன்று மந்தவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. செயராமன் தலைமையில் தோழர் ப. உ. சண்முகம் பேசுவார்.

உறையூர் தி மு; க.

29—5—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு குறத்தெரு மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஜி. பராங்குசம், எம். எஸ். மணி, ஐ. எம். ஷரீப், எஸ். ஜி. கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

மதுரை

இ. இராம. இருளப்பகோனர் நினைவுப் படிப்பகத்தின் முகல் ஆண்டு விழா 29—5—55 ஞாயிறு மாலை 6 மணிச்கு நடைபெறும். உயர் திரு. பி. டி. இராசன் தலைமையில் பல தோழர்கள் பேசுவர்.

திருச்சி மாவட்ட தி. மு. க. செயற்குழு நடவடிக்கைகள்

●

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் 22—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி சிந்தாமணி தி. மு. கழக அலுவலகத்தில் செயலாளர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் மாவட்ட பிரதிநிதிகள் 38 பேர்கள் வந்திருந்தனர். 5 பேர்கள் கூட்ட முடிவுகளுக்கு கடிதம் மூலம் ஒப்புதலைத் தெரிவித்துக் கொண்டனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

முன்னாள் பொதுச்செயலாளராக இருந்துபணியாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

புதிய பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை செயற்குழு தனது இதயபூர்வமாக வரவேற்று பாராட்டுவதுடன், ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பொதுக்குழுவினரை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மாநில மாநாட்டுக்கு நமது மாவட்டம் கொடுக்க வேண்டிய பங்கீட்டுத் தொகை ரூ 2000- (இரண்டாயிரத்தையும்) ஜுன் திங்கள் 15—ம் தேதிக்குள் கீழ்க்கண்டவாறு கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. சிற்றூர்கிளை ரூ 25. பேரூர்கிளை ரூ 50. நகரக்கிளை ரூ 100. திருச்சி நகரம் ரூ 200.

தேர்தல் நடத்தி பதிவு செய்யப்பட்ட கிளைக் கழகங்கள் தவிர பாக்கியுள்ள கழகங்கள் ஜுன் மாதம் 30—ந் தேதிக்குள் தேர்தல் நடத்தி மாவட்டக் கழகத்துக்கும்—தலைமைக் கழகத்துக்கும் அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டியது. அதன் பிறகு ஜுலை முதல்வாரத்திலிருந்து மாவட்ட செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் முன்னிலையில் வட்டந்தோறும் வட்டக்குழு அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

நமது மாவட்ட செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்களை மாநில மாநாட்டுக்கு வரவேற்புக் குழு தலைவராக தேர்ந்தெடுத்த பொதுக்குழுவினருக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

●

ஜி. பி. எஸ். அன்னையார் மறைவு

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் திரு ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் அன்னையார் பார்வதி யம்மாள் 20—5—55 இரவு 9—மணிக்கு தனது 116வது வயதில் இயற்கை எய்தி விட்டார்கள் என்ற செய்தி கேட்டு வருந்துவதுடன் திரு ஜி. பி. எஸ். அவர்களுக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்கிரஸ்-சுயநலமிகளின் கூடாரம் ?

●

திரு. நேரு பண்டிதர் அவர்கள்,
புதுடெல்லி

"ஆசியாவின் ஜோதி"யே நலம் வேண்டுகிறேன். 20—5—55-ம் நாளன்று புதுடெல்லியில் அ. இ. காங்கிரசின் ஆதரவில் நடைபெற்ற பெண்கள் இலாகா அமைப்பாளர்கள் மாநாட்டில் பேசிய பேச்சினைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். காங்கிரஸ் கூடாரத்தின் இன்றைய நிலையை கீழ்க்கண்டவாறு விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள்.

"சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒரு உன்னத லட்சியத்திற்காக மக்கள் காங்கிரசில் ஆர்வத்துடன் சேர்ந்தார்கள். ஆனால் இப்பொழுதோ சுயநலமிகளும் விரும்பத்தகாதவர்களும் பெருவாரியாக காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் புகுந்து கொள்ள ஆரம்பித்துவிட்டனர். இப்படிப் பட்டவர்கள் காங்கிரசுக்கு இழுக்கையே தேடித் தருவார்கள், எனவே அவர்களைக் காங்கிரசிலிருந்து எப்படியும் வெளியேற்ற வேண்டும்."

என்பது தங்களின் காரசாரமான பேச்சாகும்.

நேரு பண்டிதரே, நான் கேட்பதற்காக ஆத்திரப்படக் கூடாது. காங்கிரசிலே சுயநலமிகள் புகுந்து கொண்டார்கள் என்று யார் மீதோ பழியைச் சுமத்திப் பேசிவிடுவதால், தாங்கள் பத்தரைமாத்துத் தங்கமாக காட்சியளிப்பதாய் எண்ண வேண்டாம். அந்த அளவுக்குப் பொதுமக்கள் இன்று அரசியல் விஷயங்களில் ஏமாந்தவர்களாக இல்லை. காங்கிரஸ் கூடாரத்தில் எந்த சுயநலமிகள் விழுந்தடித்துக்கொண்டு இடம் பிடித்து வருகின்றனர் என்று ஒப்பாரி வைக்கிறீர்களோ அந்தச் சுயநலமிகளுக்குச் சபாஷ் பட்டம் கொடுத்து ஆதரவு தருவது தங்கள் ஆட்சிதானே! இதனைத் தாங்கள் மறுக்கத்தான் முடியுமா? எனவே பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற வித்தையில் தாங்கள் தீவிர நடை போட்டுக் கொண்டு காங்கிரஸ் முகாமில் சுயநலமிகள் புகுந்து கொண்டனர் என்று பசப்புவது எதற்காக?

காங்கிரஸ் கூடாரத்தில் மலிந்துள்ள சுயநலமிகளை விரட்ட வேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே தங்களுக்கிருக்குமானால் நடைமுறையில் இதற்கு ஆவன செய்ய முடியாதா? இன்னும் சொல்லுவேன், சுயநலமிகள் என்று வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களைக்கூட மீண்டும் காங்கிரசுக்கு வாருங்கள் என்று வருந்தி அழைக்கும் தாங்கள், காங்கிரசில் சுயநலமிகளும் விரும்பத் தகாதவர்களும் புகுந்து விட்டனர் என்று பசப்புவதில் அர்த்தமிருக்கிறதா யென்று கேட்கிறேன்.

ஒருக்கால், சொல் ஒன்று செயல்வேறாக யிருப்பதுதான் ஆசியாவின் ஜோதி என்ற பெயருக்கு டிரேட் மார்க் ஆக இருக்குமோ அறியேன். எல்லாம் பெரிய இடத்து விவகாரமல்லவா!

அன்புள்ள, கூத்தரசன்

*

தோழர் எம். பக்தவத்சலம் அவர்கள்
சென்னை

அன்புடையீர், நலம் வேண்டுகிறேன். சென்னை சர்க்காரிலுள்ள எட்டு மந்திரிகளின் பேச்சும், போக்கும் வரவர கோமாளித்தனத்திற்கு முதலிடம் பெறுவதில் முன்நிற்கிறது. அமைச்சர்கள் என்ற பொறுப்பில் எப்பிரச்னையிலும் திட்டவட்டமாக பேசுவதே அரிதாயிருக்கிறது. குறிப்பாக சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னைக்கு சாதக பாதகமானவர்கள் ஆகிய இருசாராரும் அமைச்சர்களை அணுகும்போது நியாயம் நேர்மை தெளிவான புத்தி ஆகியவைகளை அடிப்படையாக வைத்து அப்பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களிடம் பேசுவது அல்லது அப்பிரச்னையில் கவனம் செலுத்துவது தான் அரசியல் பண்புக்கு ஏற்றதாகும்.

ஆனால் சென்னை மாநில அமைச்சர்களாகிய தாங்களும், ஏனையோரும், எந்த பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் மனம் போன போக்கிலே பேசுவதானது தாங்கள் ஏற்றுள்ள பொறுப்புக்கேற்ற செயலாகுமா யென்று கேட்கிறேன்.

அதிலும் இந்த எட்டு அமைச்சர்களில் தாங்கள்தான் இவ்வித கோமாளிப் பேச்சில் முதன்மையாக நிற்கின்றீர்கள். எல்லோரும் பால் சாப்பிடுங்கள்—எல்லோரும் வெல்லம் சாப்பிடுங்கள் என்று வரட்டுக் கூச்சல் போடுவதுடன், முன்பு வெல்லத்துடன் சாணமும் கலந்திருந்தது இப்போது இல்லை யென்ற ஆராய்ச்சிக் கண்டு பிடிப்பை ஒரு நிருபரிடம் கூறியிருக்கிறீர்கள்.

என்னதான் நெருக்கடியானாலும் வெல்லத்துடன் சாணம் கலக்கும் அளவுக்கு அநீதி நடைபெற்றதென்றால், அந்த அநீதியைத் தெரிந்திருந்தும் அதற்கு இதுவரை மூலாம் பூசி மூடிவைத்த உங்களைப் பற்றி மக்கள் என்ன கருதுவார்கள்?

ஒருக்கால் பஞ்சகவ்வியம் என்ற பேரால் மாட்டுச் சாணத்தையும் மூத்திரத்தையும் அப்படியே சாப்பிடும் மேதாவிகள் நிறைந்த இந்நாட்டில் வெல்லத்தில் சாணம் கலந்திருப்பது பாபமான காரியமல்லவே என்று எண்ணிவிட்டீர்களா?

உதகைக்குச் சென்று தங்கள் உச்சி குளிர்ந்த வேளையில் முன்பெல்லாம் வெல்லத்தில் சாணம் கலந்திருந்த ஆராய்ச்சியைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினீர். இப்போதுள்ள வெல்லத்தில் என்னென்ன கலந்திருக்கிறது என்பதை அடுத்த ஊட்டி சீசனில் தங்கள் உச்சி குளிரும்போது வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கலாமல்லவா? என்ன செய்வது குடியரசு ஆட்சியில் குட்டி மந்திரிகளின் லட்சணம் இப்படித்தான் இருக்கும் போலும்!

அன்புள்ள கூத்தரசன்

கே: பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் போட்டியிடுவதைப்பற்றி பொதுக்குழுவில் நிர்ணயிக்கப்படும் என்பதை ஏன் நிர்ணயிக்கவில்லை? எப்போதுதான் முடிவு செய்யப்படும்?

—மாணிக்கம், சங்கரஹள்ளி

ப: தோழரே, குறிப்பிட்ட இந்தப் பொதுக்குழுவில் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுவதைப் பற்றி விவாதிக்கப்படும் என யாராவது தெரிவித்தார்களா? அல்லது பொதுக்குழு நிகழ்ச்சிக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததா இல்லையே எனவே இப்பிரச்னை குறித்து முடிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது முடிவுசெய்யப்படும். அதுவரை சற்று அமைதியாயிருப்பீராக.

*

கே: திருச்சியில் நடைபெற யிருக்கும் மாநில மாநாட்டை கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்வதற்குத் தடையில்லாத வகையில் (கல்லூரி திறப்பதற்கு முன்) நடத்தினால் என்போன்ற மாணவர்கள் கலந்துகொள்ள வாய்ப்பு கிட்டுமல்லவா?

—இரா. செங்குட்டுவன், பாளையங்கோட்டை

ப: மாணவர் பட்டாளம் கலந்துகொள்ளும் முழு வாய்ப்புடனேயே மாநில மாநாட்டை அதன் நிர்வாகிகள் நடத்துவார்கள் என்பதை உறுதியாய் நம்புங்கள் தோழரே.

●

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

கே: அஞ்சா நெஞ்சனே நீங்கள் (தி. மு. க. வினர்) ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சொல்கிறீர்களே, அந்தத் தேவன் யார்—எங்கிருக்கிறான்? **—பா. பெ. நாராயணசாமி, ரெட்டூர்**

ப: தோழரே இவ்வித கேள்விகளுக்கு எத்தனை முறைதான் பதில் சொல்வது. ஒருவனே தேவன் என்பவர்தான் அன்பே சிவம் அறிவே கடவுள் என போற்றப்படுபவர். அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பவர். தெரிகிறதா.

*

கே: தன்மானம் உள்ளவர்கள் முதலில் மானமும் பிறகு சோறு என்று கருதுகிறார்கள். ஆனால் தனது தன்மானம் எக்கேடுகெட்டாலும் சோறுதான் தேவை யென்று சிலர் கூறுகின்றனர். இவர்களை எதற்கு ஒப்பிடுவது? **—கா. இராசாமணி, பரவை.**

ப: "மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்—முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்" என்பதற்கு இந்தச் சோற்றாலடித்த பிண்டங்களை ஒப்பிடலாம்.

*

கே: தி. மு. க. மாநில மாநாட்டிற்கு நிதி அனுப்ப வேண்டிய முகவரி என்ன?

—இரா. செங்குட்டுவன், பாளையங்கோட்டை

ப: அறிஞர் அண்ணா, பொருளாளர், தி. மு. க. மாநிலமாநாடு, திராவிட நாடு அலுவலகம் காஞ்சீபுரம். என்ற முகவரிக்கு உடனே அனுப்புவீர்களாக.

*

கே: (1) தி. மு. கழகத்தின் இரு வண்ணக் கொடி எதை குறிக்கிறது? (2) அறிஞர் அண்ணா ரஷ்யா செல்வாரா?

—பன்னீர் அய்யாசாமி, இராஜபாளையம்

ப: (1) தி. மு. கழகக் கொடியில் தீட்டப்பட்டுள்ள கருப்பு, நம் திராவிடம் அரசியல், சமூக பொருளாதாரத் துறைகளில் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், சிகப்பு வண்ணம் அவ்வடிமைத்தனத்தை தகர்த்தெறிய தி. மு. கழகம் செய்துவரும் முயற்சியை (பணியை) யும் எடுத்துக் காட்டுகிறது. (2) அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஓய்வும் பிற வசதிகளும் ஏற்படும்போது ரஷ்யா மட்டுமல்ல பிறநாடுகளுக்கும் சென்று வருவார்.

*

கே: தோழர் என். வி. நடராசன் அவர்கள் 'முரசொலி' பொங்கல் மலரில் எழுதிய கட்டுரையில் டெல்லி சட்ட சபையில் மோடி மசோதா வந்தபோது ஓட்டெடுப்பில் சத்தியமூர்த்தி அய்யர் கலந்து கொள்ளாததுபற்றி எழுதி யிருந்தார். எங்களூரிலுள்ள தி. மு. க. அனுதாபிகள் மோடி மசோதா என்றால் என்னவென்று விளக்கம் கேட்கிறார்கள். இதுகுறித்து தாங்கள் விளக்கம் கூறமுடியுமா?

—எம். வில்வநாதன், கவசம்பட்டு

ப: தோழரே, மோடி என்ற டெல்லி சட்டசபை உறுப்பினர் 1936-ம் ஆண்டு ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதற்குப் பெயர்தான் மோடி மசோதா என்பது. அத்தீர்மானம் முதலாளிகள் தொழிலாளர் பிரச்னை குறித்ததாகும். சத்தியமூர்த்தி அய்யர் போன்ற தேசியத் தலைவர்கள் அம்மசோதாவின் மீது காரசாரமாய்ப் பேசிய தற்கேற்ப ஓட்டெடுப்பின்போதும் சபையிலிருந்து தங்களின் கடமையைச் செய்திருந்தால் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கும். ஆனால் சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்கள் வாக்கெடுப்பின்போது சட்ட சபையில் காணோம். இதுதான் விவரம் தோழரே.

*



ஏழு நாட்களுக்கு முன்னர்!

திருமணத்துக்குத் தேதி தந்தாள் வனஜா! தித்திக்கும் செய்தி கேட்டு தேன் சோலையில் சேகர் உலவினுன்!

*

32

திரையை முத்தமிட்ட வானத்து நீர்த்துளிகள் ஓய்ந்து கொண்டிருந்தன. புதுக் காவியம் பாடி முடித்த குயில் மொழியாள் குளிர்ந்துபோன இதயத்தோடு வாழ்த்தி வழியனுப்பினுள் சேகரை. பூரிப்புப் பூங்காவிடம் விடைபெற்றுக் கொண்டு புது நினைவோடு வெளியேறிக் கொண்டிருந்தான். பாதையிலே கால் பதித்தான். முன்பெல்லாம் அழுத இதயத்தோடு சிரித்த உலகைப் பார்த்தான். இப்போதோ சிரிப்புலகின் எதிரொலியானுன்.

சிந்து பாடிய உள்ளத்தின் நெடுஞ் சுவரிலே, வனஜாவின் நினைவுப் பந்து உதைபட்டு, உதைபட்டுத் திரும்பிக் கொண்டேயிருந்தது; காதல் நினைவுகள்தான் கசப்பதில்லையே! எத்தனை முறைதான் திருப்பித் திருப்பிப் படித்தாலும் அறிஞரின் ஏடு சலிப்பைத் தருவதில்லையே ... அதைப் போலத்தானிருந்தது சேகருக்கும். சாகாத நினைவுகள் சஞ்சரித்துக் கொண்டேயிருந்தன.

பழகிய சிரிப்பொலி கேட்டுத் திரும்பினுன் சேகர்! திரும்பிய கண்கள் திகைத்து விட்டன...... நிலைபெற்ற சிலைபோல அசைவற்று நின்ருன். யாரின் கழுகுக் கண்ணிலே படக்கூடாதென்று பதுங்கிப் பதுங்கி வந்தானே அந்தப் பாலத்து வாசி வனஜாவின் வீட்டுத் தாழ்வாரத்திலிருந்து இறங்கிக் கொண்டிருந்ததை கண்டதும் பிரமித்துப் பெருமூச்சு விளப்பி நின்ருன். சிரித்து நின்ற பாலத்து வாசி, நடந்து வந்து சேகரின் முதுகிலே தட்டிக் கொடுத்தான். புலிநகம் குத்துவதுபோல யிருந்தது சேகருக்கு!

......இரவு வண்டியிலே நீ ஊர் போவதாகக் கூறினுயே!

அப்போது அப்படித்தான் கூறினேன். இப்போது ஊர் போயிருந்தால் உன்னைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாதே! சேகர் உண்மையிலேயே நீ புத்திசாலி என்னையே ஏமாற்றிவிட்டாயே! உன் உள்ளத்தைத் திறந்தே காட்டவில்லையே சேகர். அரசியலைப் பற்றி காலையெல்லாம் கதை கதையாகப் பேசினுயே...கிளிக் கூண்டுக்குப் போகிறேனென்று கூறவில்லையே!

கிளிக் கூண்டா?

பைங்கிளியைத்தானே தேடி வந்தாய். என்னிடங்கூடக் கூருமல், முந்திக் கொண்டாயே...... அழைத்தால் வரமாட்டேனு நான்

கண்ட காட்சிக்குத் தவருன முலாம் பூசுகிருய். என்னைக் கேவலமான மதிப்புரையின் சொந்தக்காரனுக்கி வைக்கிருய். எச்சரிக்கிறேன்—என் வாழ்வுப் பாதையில் வேலிபோடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருய் ... வேண்டாத வேலை! தெரியாமலிருந்தால் திருந்திக்கொள்!

திருந்திக் கொள்வதா? முதலில் நீ திருந்து சேகர். மதுக் குடத்தின் மீதமர்ந்து கொண்டே மதுவிலக்குப் பிரசாரம் நடத்தத் துவங்குகிருயே. மந்திரி வீட்டின் கொல்லைப்புறத்திலேயே 'சாராயம்' காய்ச்சிய செய்திபோல வேடிக்கைச் செய்தி பேசுகிருயே! வனஜா—அந்த வடிவழகி உனக்குத்தானு சொந்தம்......உரிமை கொண்டாடுகிருயே!

வனஜாவைத் தெரியுமா உனக்கு! கபட நாடகத்தை என்னிடமும் ஆடத் துவங்கிவிட்டாயே!

உலகம் நாடக மேடை என்று கூறினுனே அவனது வார்த்தையை உண்மையாகத் துவங்கிவிட்டாய் சேகர். நானு நாடகமாடுகிறேன். நானே கதை எழுதி நானே நடித்து 'டப்பா'வாகும் அந்த நிலைக்கு இன்னும் நான் தகுதியாகவில்லையே! வனஜாவைப் பற்றி நீ எப்படியோ நினைத்திருக்கிருய்...!

உன் உள்ளத்தையே கேள்—பிறகு நான் கூறப்போவதைக் கேட்பதற்கும் நெஞ்சத்திலே தைரியமாக யிரு!

........பாதையிலே நடந்து கொண்டே சிகரெட்டைப் பற்ற வைத்தான் பாலத்துவாசி. சேகருக்கும் ஒன்று நீட்டினுன். ஏற்கனவே அவன் உள்ளமேதான் சூடேறிக் கிடந்ததே......தலையசைத்து மறுத்துவிட்டான். விட்டு விட்டுத் தூறிய மழை விடாமலேயே பெருமழையாகிக் கொண்டிருந்தது. இருவருமே ஒதுங்குமிடந் தேடினர். நீர்த் துளிகள் சேகரின் உடம்பெல்லாம் ஊசி குத்திக் கொண்டிருந்தன. தூரத்துப் பாதையிலே பார்வையைப் பதியவைத்தான்.

அழகிழந்த மாஜி மாளிகை தலைதாழ்த்திக் கிடந்தது. அங்கே சாகாமல் செத்துக் கொண்டிருந்த அகல் விளக்கின் புது ஒளி கல்லடிபட்டுச் சரிந்திருந்த சிதைந்த மாளிகையின் மேனியைக் காட்ட உதவிக் கொண்டிருந்தது, நீர்த் துளிகளை அம்பாக்கிப் போர்தொடுத்த கருமேக வானத்திடமிருந்து தப்ப—அந்த மாஜி மாளிகையை இருவருமே தஞ்சமடைந்தனர்.

இடிந்து சுவரோடு சுவராகச் சாய்ந்திருந்த தூணிலே சேகரும் சாய்ந்திருந்தான். குளிர்காற்று வீசியடித்தது. பாலத்துவாசியோ சிகரெட்டை மாறிமாறிப் பற்ற வைத்து குடேற்றிக் கொண்டிருந்தான். அந்த நடுங்க வைக்கும் குளிரிலும் சேகரின் முகத்திலே முத்து முத்தான வியர்வைத் துளிகள் அரும்பிக் கொண்டேயிருந்தன. மாஜி மாளிகையின் உள்ளிருந்து வீசிக்கொண்டிருந்த சிறு ஒளியிலே இருவருமே அர்த்தமில்லாமல் அசட்டுப் பார்வை பார்த்துக் கொண்டனர். வெகு நேரத்துக்குப் பிறகு சேகரின் பார்வை ஜன்னலுக்கும் உள்ளே பாய்ந்தது.

மஞ்சள் நிறச்சுவரிலே இரண்டு நிழலுருவம் மட்டும் தெரிந்தது, நாடகத்திலோ சினிமாவிலோ நிழற் காட்சி காட்டுவதுபோலயிருந்தது அது. இரண்டு துருவங்களின் முகமும் ஒன்ருேடொன்று ஒட்டிக் கொண்டன — பின்னர் விலகிக்கொண்டன... இப்படிப் பலமுறை நடந்து முடிந்தது. அந்த நள்ளிரவிலே அமைதி உதயத்திலே, தன்னந்தனியாக இருக்கும் பாழடைந்த விடுதியிலே முகத்தோடு முகம் சேர்ந்த காட்சி என்னென்னவோ எண்ணங்களை தூண்டியது சேகருக்கு. காட்சியின் அதிர்ச்சியிலே அசைவற்று நின்ருன். நினைவுகள் தட்டிவிட ஜன்னலுக்கும் உள்ளே எட்டிப் பார்த்தான் நன்ருக,

ஒரு காலில்லாத கட்டில் சுவரின் துணையோடு பழம் பெருமையை நினைத்து மகிழ்ந்து படுத்துக் கிடந்தது. அதிலே சாய்ந்து படுத்திருந்தான் யாரோ ஒருவன்—ஆனுல், அவன் நிழல் மாடுதானென்பதை அவன் கழுத்திலே நெளிந்து கொண்டிருந்த தங்கச் சங்கிலி சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது. அந்தத் தங்கச் சங்கிலி தாங்கிய முரட்டுக் கழுத்தைச் சிரித்துச் சிரித்துப் பேசிய ஒரு சிவந்த மேனியாள் தடவிக் கொடுத்துக்கொண்டேயிருந்தாள் அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்......அதை வீணுகானமாக மதித்து அவனது வரண்ட உதடுகளுக்கு ஈரப் பசையை உண்டாக்கி வைத்தாள். முகத்தோடு முகம் சேர்ந்தது. நிழலுருவமும்அப்படித்தான் காட்டியது. சேகரின் நெஞ்சு படபடத்தது. அவன் தோளிலே முகத்தைப் பதித்துக் கொண்டு பாலத்து வாசியுந்தான் அந்தக் காட்சியைப் பார்த்தான், அவனே இதயத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். பெருஞ்சிரிப்பை முழக்கயிருந்த பாலத்து வாசியைக் கைப் பிடித்து இழுத்துப் போய் வேறு மூலையிலே நிறுத்தி வைத்தான் சேகர்.

..."யாரோ புதுக் காதலர் சந்திப்புக்கு இந்தப் பாழடைந்த மண்டபமாவது துணை செய்கிறது அதற்கு இருக்கும் கருணை கூட உனக்கில்லையே. உலகம் அவர்களை இங்கே விரட்டி யிருக்கிறது. இங்கே நாம் வேறு தொல்லையாக..."

"புதுக் காதலரா! சேகர் உன் காதல் லட்சணமே தனி! எதற்கும் காதல் முலாம் பூசிவிடுகி றுயே! நீகண்டது காதலல்லப்பா! —காமச் சேற்றிலே மூழ்கித் தத் தளித்த இரண்டு பரிதாப உருவத்தைத்தான் பார்த்தாய். காதல் கானம் பாடும் வானம்பாடிகளல்ல—அவர்கள். சோரக் குகையிலே யிருந்து குரல் கொடுத்த இரு கோட்டான்களைத் தான் பார்த்தாய் அவள் ஊர்வேசி! கண்டவரின் நெஞ்சிலே காம மெழுகுவர்த்தியைக் கொளுத்தியவள். அவனே இன்பத்துக்குப் பேரம் பேசிக் கொண்டவன். இப்போது புரிகிறதா? இந்த நள்ளிரவு வியாபாரம் இடிந்த இந்த மாளிகையிலே மட்டுமல்ல இந்தத் தெருவே அப்படித்தான். சேகர் நான் கூறினுல் கோபிப்பாய்......இப்போது நீயாகவே சிந்தித்துப்பார்: நீ புகழும் வனஜா தேடிப் பிடித்திருக்கிருளே இந்தத் தெருவை... எதற்காக? இது தெருவின் பிற்பகுதி. எனவே, பாழடைந்த நிலையிலே மாளிகைகள். வனஜாவோ தெருவின் முற்பகுதியில் — நவநாகரீக வசதியோடு—அதுவும் கௌரவப் போர்வைக்கு ஆசிரியைத் தொழில் வேறு!"

முட்டாளே! நீ வரம்பு மீறுகிருய். வந்த விஷயத்தை விட்டு என் சொந்த விஷயத்திலேயே கால் வைக்கிருய். வனஜாவைப் பற்றி இனி வார்த்தையாடினுல் அதன் விளைவை நீ அனுபவித்துத்தானுக வேண்டும். எனக்குரியவள் அவள்!

என்ன சேகர் பைத்தியமா உனக்கு! எனக்கும் வேண்டியவள்தான் அவள். அதற்காக மங்கை கங்கையைத் தலையில் தாங்கிய பரமசிவனுகவில்லையே நான். உனக்குமட்டுமேன் அவ்வளவு பரிவு—பாசம்! புதுச்சுவையோ இல்லை, இலவச விருந்தோ?

மீண்டும்—கடைசியாகக் கூறுகிறேன்...

எதைக் கூறுகிருய்—காலத்தை ஏய்க்கும் ஜாலக்காரி வனஜா இல்லை, என்ருகூறுகிருய்? நாவல்களிலே திடுக்கிடும் சம்பவங்கள் வந்து போவதுபோல அந்த நாரீமணியின் வாழ்விலும்...இடியும் மின்னலும் எத்தனை எத்தனையோ! வனஜா போன்றவர்களால் தான் குற்ருலம் பெருமையடைகிறது. அவளைப் போன்ற முதலரகங்கள் இங்கே அத்தி பூத்தது போல!

என் வாழ்வுத் தோழிக்கு இழிவு கற்பிக்கிருய் உன் சின்ன புத்தியால்!

வாழ்வுத் தோழியா...அடடா! உன் வாழ்வுத் தேள் என்று வேண்டுமானுல் கூறு...ஒப்புக் கொள்கிறேன் கண்ணியமாக.

அவள் என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவளடா!

திருட்டு மணமென்று திருத்திக் கூறு சேகர்!

வனஜாவின் நிழல் நான்...என்னேடு படித்தவள். எனக்காகவே பிறந்தவள். அவளுக்குத்தான்

11-ம் பக்கம்

ஆபத்தான வித்தை

மூலம்: போத்தன் ஜோசப் — தமிழாக்கம்: ஏ. டி. பிரான்சிஸ்

முன்னுரை:—இந்தி எதிர்ப்புப் போராட்டக் …ல கன்னடர்களும், மலையாளிகளும் கலந்து கொள்வார்களா என்று கேள்விக் கணைகள் வீசும் தேசியத் தோழர்கட்கு மலையாள செம்மல், அரசியல் நிபுணர் சிறந்த ஆங்கில எழுத்தாளர் திரு. போத்தன் ஜோசப் தனது தினத் தாளாகிய டெக்கான் ஹெரால்டு வாயிலாகக் கன்னட நாட்டில் எழுப்பி வரும் முழக்கத்தைக் காட்டுகிறோம். இந்தி ஏகாதிபத்தியம் அபாயகரமானதாம்! அதுமட்டுமல்ல அதோர் விசித்திரமான வித்தையாம்! தாம் தென்னவர் என்ற பொறுப்புணர்ச்சியோடு தேசிய மொழிப் பிரச்னையை அலசுகிறார். நேர்மையாக இந்த பிரச்னையை ஆராய்வோர் அனைவரும் நமது நோக்கத்திற்குத்தான் நிச்சயம் வருவார்கள் என்பதற்கு சான்று பகருகிறார் போத்தன் ஜோசப்.]

*

இந்தியை தென்னகத்தில் 15 ஆண்டுகளில் நுழைந்துவிடவேண்டுமென்று, நடைமுறையில் அமுல் நடத்த இயலாத வகையில் சட்டமியற்றியதை தென்னாட்டவர் கண்டித்துப் பேசுகிறார்கள் என்பது வடவர்களிடம் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. அந்த அதிர்ச்சி ஏற்படுத்திய விளைவால் இன்று தேசிய மொழி பரவுவதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு மாநாடு கூட்டி இந்தியை எப்படியேனும் திணித்துவிடலாம் என்ற ஆத்திர முடிவிற்கு டெல்லி இந்தி வாலாக்கள் வந்திருக்கின்றனர். இந்தியைப் பாராட்டி கோஷமிடுவதன் மூலம் அதனை தேசிய மொழியாக மாற்றிவிட முடியும் என்று இதுகாறும் எண்ணியிருந்த வடவர், ராஜாஜி போன்ற இந்தி—விரும்பிகள் 'தேசிய மொழியாக ஏற்ற தகுதி பெற இந்தியை முதலில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு' என்று பேசியதைக் கேட்டு, இப்பிரச்னையில் ஆழ்ந்த கவனம் செலுத்த ஆரம்பிக்கின்றனர். இந்தியாவின் பெரும் மொழிகளாக அங்கீகாரம் பெற்றுள்ள 14 மொழிகளில் ஒன்றாகிய இந்தியை ஆட்சி பீடத்திற்கு அழைத்துச் செல்வது முறையா என்று யோசிப்பதற்கு முன் அவ்வாறு ஆட்சி பீடத்தில் ஒரே மொழி கோலோச்சுவதற்கு தகுதியான நிலையில் இந்தியா இருக்கின்றதா என்று முதலில் ஆராய வேண்டும். அதுவும் குறிப்பிட்ட காலத்திற்குள் தேசியமொழி அந்தஸ்துக்கு ஒரு மொழியை அருகதையாக்கிவிடுவது நாட்டின் இயல்புக்கு ஒத்ததா என்று கவனிக்கவேண்டும். ஒரு மொழிதான் இந்தியா முழுவதும் தேசிய மொழி என்ற மதிப்பில் உலவவேண்டுமென்று தற்போது வகுக்கப்பட்டுள்ள அடிப்படைத் திட்டமே தவறானது என்பது மட்டுமல்ல, இந்தி எதேச்சாதிகாரிகளிடமே இதைப் பற்றி வெவ்வேறு மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன.

இந்தி ஒன்றே இந்தியா முழுவதும் தேசிய மொழியாக இருக்க முடியும் என்ற கோட்பாட்டுக்கே சாவுமணி அடிப்பது போல பேசுகின்ற இந்தி வெறியர்களும் இருக்கின்றனர் திடமான கொள்கை இல்லாத காரணத்தால். இதோ ஒரு உதாரணத்தைக் காட்டுகிறேன். கடந்த ஏப்ரல் 16-ந் தேதி மத்திய சர்க்கார் மந்திரி கைலாசநாத் கட்ஜு ஐந்தாம் சனாதன தர்ம மாநாட்டில் சமயோசிதமாக பேசியிருப்பதைக் கேளுங்கள். "இந்தி மொழியை தேசிய மொழி என்ற நிலையிலிருந்து அகற்றிவிட்டு அந்த இடத்துக்கு சமஸ்கிருதம் வந்துவிடும்" என்று மொழிந்திருக்கிறார் இந்தியை ஏகஇந்தியாவின் தேசிய மொழி என்று ஏற்றுக்கொண்டுள்ளவர்களில் ஒருவராகிய கைலாசநாத் கட்ஜு. அத்தகையவர் சந்தர்ப்பத்திற்கேற்ப இந்தியை நழுவவிட்டு சமஸ்கிருதத்திற்கு வக்காலத்து வாங்குவதென்றால் இந்தி விரும்பிகளிடம் தேசியவாதிகளிடம் மொழிப் பிரச்னையைப்பற்றி ஒரே கொள்கை நிலவுகின்றது என்று பொருள்! எவ்வகையான திட்டவட்டமான முடிவுக்கும் வராமல் தேசிய மொழியைப் பற்றி பேசுவது வித்தையாக இருக்கிறது. ஆம்—அபாயகரமான வித்தை.

சமஸ்கிருதம் இலக்கிய வளமிக்கது என்று தற்போது பலர் கருதுவதை யொட்டி கட்ஜு இந்தியின் இடத்தை வடமொழிக்கு அளிப்பதாயினும் அது நமக்கு வியப்பைத்தான் உண்டாக்குகின்றது. இந்தி ஆக்ரமிப்பை வெறுத்து அந்தந்த மாகாண மொழியின் வளர்ச்சியிலே கருத்தூன்றிவிட்டிருக்கின்ற மக்களையும், இந்தியைவிட தமது மொழி வளமிக்கது என்பதை அறிந்து கொண்டு இந்தியைப் பற்றி அசட்டையாக இருப்பதோடு இந்தி ஆதிக்கத்தால் தமது மொழி அல்லலுறும் என அஞ்சி தமது மொழிக்கு அரண் அமைக்க ஆரம்பித்துவிட்ட மக்களையும், மகத்தான பூர்வோத்திரத்தைக் கொண்ட தமது மொழியைவிட வரலாறு கிடையாத இந்தி உயர்வது நேர்மையற்றதென்று எண்ணுகின்ற மக்களையும் ஒருவகையில் ஆறுதல் படுத்தலாம் கட்ஜுவின் பேச்சின் மூலம். ஆனால் இந்தி எனும் இரும்பு சக்கரத்தின் கீழ் நாட்டின் பல பகுதிகளையும் நசுக்கி சமப்படுத்திவிட முடியுமென்று கருதுவது இயலாததொன்று என்பது மட்டுமல்ல, 'ஏகஇந்தியா' என்ற அமைப்பை சிதறடிப்பதற்கு வழியுமாகும். இப்போது இருந்திடும் நிலையில்கூட ஏகஇந்தியா உணர்ச்சி மிக அமோகமாக இருக்கின்றது என்று சொல்வதற்கில்லை. பல்வேறு பிரிவுகளும் தொட்டும் தொடாமலும் எந்த நேரத்திலும் உதிர்ந்துபோவது போல ஒட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்தி திணிப்பால் இந்தியா பல தனிநாடுகளாக பிரிவதற்கு சாதகமாகிவிடும்.

அனுபவத்திற்கேற்ப நம்நாட்டுச் சட்டங்கள் அவ்வப்போது மாற்றப்படும் என்று ஆட்சியாளர் குறிப்பிட்டு இருப்பதை கேட்டுமிருக்கிறோம், படித்துமிருக்கிறோம். ஆனாலும் 15 ஆண்டுகளில் இந்தியை திணித்துவிட வேண்டுமென இயற்றியிருக்கும்சட்டம் அனுபவத்தில் ஏற்படுத்திய விளைவுகளை கண்ட பின்னரும், அந்த சட்டம் மாற்ற முடியாத மனித சமுதாய நீதி போலவும், விஞ்ஞானத்தால் கண்டெடுக்கப்பட்டு மறுக்க முடியாத நியதி என்றும் கருதுவானேன்? சேத் கோவிந்த தாஸ் மிகவும் விசித்திரமான கருத்துரையை வழங்கியிருக்கிறார். தமிழர்களிடம் மலிந்துள்ள இந்தி எதிர்ப்பைப் போக்க, தமிழர்களில் சிலர் இந்தி வார்த்தைகளில் சிலவற்றை மனப்பாடம் செய்வதுபோல், இந்தி வாலாக்களும் தமிழைக் கற்க வேண்டுமென்று கூறுகிறார். இப்படி செய்வது ஏற்ற பரிகாரமல்ல என்பது மட்டுமல்ல, நடைமுறைக்கு பொருந்தாதென்பது மட்டுமல்ல, இப்படிச் செய்வது இந்தியோடு சேர்த்து தமிழையும் சித்ரவதை செய்து ஒழித்துவிடுவதாகும்.

நெடுங்காலத் திட்டமாக இருக்க வேண்டிய தேசிய மொழிப் பிரச்னையை, குறுகிய காலமாகிய 15 ஆண்டுகளுக்குள் எப்படியேனும் அமுலுக்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டு குறுக்கு வழிகளைக் கண்டு பிடிப்பதற்காகவே மாநாடு கூட்டுகிறார்களென்றே தெரிகிறது. 15 ஆண்டு காலத்தில் தேசிய மொழியை உருவாக்க முடியுமென்று கருதுகிறவர்கள் இதுவரைக்கும் எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் ஒரு சிறு மாற்றமும் இதுகாறும் செய்ய இயலவில்லை என்பதை எண்ணிப் பாராமல், தொடர்ந்து அம்முயற்சியில் வெற்றி பெற முடியுமென்று கருதி, மாநாடு கூட்டி இந்தி திணிப்பிற்கு ஏற்ற வழிகளைத் தேட திட்டமிட்டிருப்பதாக விளங்குகிறது. தேசியமொழி என்ற போர்வையில் ஒரு மொழியைத் திணித்துவிட வேண்டும் என்று கருதுவதும், அதற்கான சூழ்ச்சிகளை வகுப்பதற்கு மாநாடு கூட்டுவதும் நேர்மைக்கு புறம்பானது. பல்வேறு மொழியினருடைய எண்ணங்கள் எப்படியிருக்கின்றன என்று கண்டறிந்த பின்னரே முடிவுகளெடுக்கப்பட வேண்டுமேயொழிய, 15 ஆண்டுகளில் இந்தியைத் திணித்துத்தான் ஆக வேண்டும் என்பதை முடிவாக வைத்துக் கொண்டு அதற்காவன செய்வது விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கு ஏற்றதல்ல.

இந்தி எதிர்ப்பாளர்கள் காட்டும் காரணங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு அவ்வெதிர்ப்புகளை எங்ஙனம் முறியடிக்கமுடியுமென எண்ணுவது ஆராய்ச்சி செய்யும் முறைக்கே இழுக்கானது. அனுபவத்தில் கண்ட நிலைமையைப்பற்றி அக்கரைகாட்டாமல் கற்பனைக்கேற்ப இந்தி வெறியர்கள் எதேச்சதிகாரமாக செயல்பட தீவிரமாக முனைந்திருக்கின்றனர். இத்தகைய மமதையான போக்கின் காரணமாகவே அரசியல் குழு தவறான அடிப்படைகளை அமைத்துக் கொள்ள நேரிட்டது என்பதை மறக்க முடியாது. பீகார் மாகாணத்தில் பீகாரிமொழியை ஆட்சி மொழியாக ஏற்படுத்தியிருப்பது சாதாரண விஷயமென்றாலும் ஏக இந்தியா என்ற ஐக்கியத்திற்கு இணக்கமாக இருக்க முடியாது. இதேபோல் மொழிவழி மாநிலப் பிரிவு அமைக்கப்படும் உரிமை ஏனைய மாநிலங்களுக்கும் வழங்கப்பட்ட அதே வினாடியில் இந்திதான் தேசிய மொழி என்று பேசப்படுவது முரணானதாகும். இவ்வாறு முரண்பட்ட கருத்துக்களை அடிப்படைத் திட்டங்களாக வகுத்துக்கொண்டு எப்படி செயலாற்ற முடியும்? சென்னை நிதி மந்திரி சட்டசபையில் தமிழில் பேசப்போவதாக அறிவித்துவிட்டார். அப்படியிருந்தால் தமிழை சென்னை மாகாணத்தில் ஆட்சி மொழியாக அமைக்கப்பட்டு திறம்பட ஆட்சி செலுத்த ஏன் முடியாது? மாநிலப் பிரிவினை தோன்றுவதற்கு முன்னரே தமிழ் ஆட்சி மொழியாக ஏற்படுத்த முடியும். இங்ஙனமே அவ்வவ்வ மொழிவழி ஆட்சி மொழியாக மாறுவதை எவரும் தடைசெய்ய முடியாது. எதேச்சாதிகாரமாகவும் பலவந்தமாகவும் திணிப்பு முறையை இன்னும் இரு பொதுத்தேர்தல்கள் முடியும்வரை கையாளாமல் இருந்தால்தான் ஒருவாறு இந்தி எதிர்ப்பைத் தணிக்கக்கூடும் என்று கருதலாம். இந்த உண்மை பண்டித நேருவுக்கு விளங்கியிருப்பதாக ராஜாஜி கூறுகிறார்.

ஆனால் நேருவுங்கூட தனது விருப்பத்தை அமுலாக்க முடியாதநிலையில் இருக்கிறார். ஒருமொழி இயற்கையாகவே மலர்ச்சியடைய வேண்டும். ஆயுதங்களை தொழிற்சாலையில் செய்வதுபோல் ஒரு மொழியை நிர்மாணித்துவிட முடியாது. ஒருமொழி அதனைப் பேசுவோரின் சிந்தனைத் திறம், பண்டைய இலக்கியச் செறிவு, இலக்கியத்தை வளர்க்கவேண்டுமென்ற மக்களின் ஆர்வம் இவற்றைக் கொண்டுதான் வாழவோ, வளரவோ முடியும். அவ்வாறின்றி தேசியத் துறைகளில் பாடமாக ஆக்கப்பட்டு விட்டாலோ அல்லது அம்மொழிகளில் தேர்வுகள் நிகழ்த்துவதனாலோ, அந்தமொழி முன்னேறிவிட முடியாது. 15 ஆண்டுகளில் இந்தி தேசியத் தன்மை பெற்றுத் தீரவேண்டுமென்ற காலவரையறையை சட்டத்திலிருந்து உடனடியாக நீக்குவதுதான் தற்போது அறிவுடைமையாகும். எந்த ஒரு மொழியும் தானாகவே வளரும் தகுதியுடையதா என்று கவனித்துப் பார்த்து அத்தகைய வளர்ச்சிக்கு எவ்வளவு காலம் தேவைப்படுமோ அவ்வளவு காலம் நிச்சயம் தரப்படல் வேண்டும்.

அதற்கு மாறாக 15 ஆண்டு காலவரையறை வற்புறுத்தப்பட்டால் வளமிக்க மொழிகள் இந்தியின் ஆதிக்க வெறித்து பணிய மறுப்பதன் விளைவாக ஏகஇந்தியா' உடைந்து போவது உறுதி. மற்ற மொழிகளைவிடச் சிறிது அதிகப்படியானவர்கள் இந்தியைப் பேசுகின்றார்கள் என்ற ஒரே கண்ணோட்டத்தில் தேசிய மொழிப் பிரச்னையை ஆராய்வது ஆபத்தை விளைவிக்கக் கூடியது. தற்போதுள்ள நிலையில் இந்தியைத் தவிர வேறுமொழிகளைப் பேசுவோர்களின் எண்ணிக்கையே அதிகமானது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

கால் ஆணிக்கு மேல்பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும் போது பாதமானது தரையில் வைக்க முடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0
தபால் சார்ஜ இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
சென்னை-1

ஆமதாபாத்

15-5-55-ல் மணிநகர் 2 வதுவட்டம் தி. மு. க. செயற்குழு மாலை 6 மணிக்குக் கூடி கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வருகிற ஜுலைமாதம் ஆண்டுவிழா நடத்துவதெனவும் அதுசமயம் தோழர் ஈ. வி. கே. சம்பத்தை வரவழைப்பதெனவும் முடிவு செய்யபபட்டது.

வன்னியர்பாளையம்

15-5-55 ஞாயிறு பகல் 2 மணி யளவில் வன்னியர்பாளையத்தில் தோழர் ஆர். அன்புமணி தலைமையில் வன்னியர்பாளையம் தி. மு. க. கிளைத் தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் கே. இளங்கோ, துணைச்செயலாளர் மு. நக்கீரன், பொருளாளர் ஆர். அன்புமணி. செயற்குழு உறுப்பினர்கள் 11 பேர்.

செய்திகள்

இலங்கை

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக, கொழும்பு கிளையின் சார்பில் தாயகம் செல்லும் தோழர் என். கதிரவன் அவர்களுக்கு கழக சார்பில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் வி. எஸ். முருகன் தலைமை வகித்தார். கழக செயலாளர் தோழர் பி தம்பித்துரை தோழர் கதிரவனுக்கு மாலை அணிவித்து பாராட்டு மடல் வாசித்தளித்தார். அன்னாரின் இயக்க சேவையை குறித்து தோழர்கள் இரா. அதி. மணி, டி. எம். பீர்முகம்மது, முக்தார், நா. பழனிநாதன், மு. கா. இராசன் மற்றும் பலர் பேசினர். தோழர் கதிரவன் அவர்கள் இலங்கை தி. மு. க. நீதிக்குழு செயலாளராகவும், கொழும்பு கிளையின் செயற்குழு உறுப்பினராகவும் இ. தி. மு. க. மத்தியகுழு உறுப்பினராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 'அன்னை' என்ற பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் சிறிது காலம் பணியாற்றினர்.

தமிழகத்தில் அவரது முகவரி :
என். கதிரவன், கல்லங்குடி.
பெயகாரை அஞ்சல்
(இராமநாதபுர மாவட்டம்)

தூத்துக்குடிக்கு பொதுச்செயலாளர் வருகை

29—5—55-ல் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் எம். ஏ. நெல்லை எக்ஸ்பிரசில் தூத்துக்குடி வருகிறார். பொதுச் செயலாளரை வரவேற்க தூத்துக்குடி தி. மு. கழகத்தின் மூலம் பிரம்மாண்டமான ஏற்பாடு செய்யப்படுகிறது. அக் கூட்டத்தில் நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதி பொதுச்செயலாளர் அவர்களிடம் கொடுக்கப்படும். அனைவரும் கலந்து கொள்வதுடன் கிளைகளின் பணத்தை கோட்டாவின்படி 25—5—55 க்குள் நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன். வணக்கம்

கே. வி. கே. சாமி,
நெல்லை மாவட்டச் செயலாளர்

மதுரை மாவட்டக் கிளைக் கழகங்களுக்கு

மாநில மாநாட்டுக்கு மதுரை மாவட்டத்தின் சார்பில் கொடுக்க வேண்டிய ரூபாய் 2000 க்கு ஒவ்வொரு கிளைக் கழகங்களும், மாநாட்டிற்காகவும், மாவட்டக் கழக அலுவல்களுக்காகவும் ரூபாய் 20 கொடுப்பதென்றும் முனிசிபல் நகரங்கள் ரூபாய் 100-க்கு குறையாமல் கொடுப்பதென்றும் 8—5—55 திருப்பரங்குன்றத்தில் கூடிய மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானித்தபடி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புவதோடு இம்மாத இறுதிக்குள் நம்முடைய கோட்டாவை தலைமைக் கழகத்திற்கு கொடுக்க வேண்டுமென்பதை தோழர்கள் நினைவில் வைத்து உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்

எஸ். முத்து, செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. கழகம்
4, கட்ருப்பாளையம், மதுரை.

மதுரை நகர் கிளைக் கழகந் தோழர்களுக்கு தேண்டுகோள்

மதுரை நகர் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 1—5—55 கூடி தீர்மானித்தபடி மாநில மாநாட்டிற்கு தங்கள் கிளைக் கழகத்தின் சார்பில் கொடுக்க வேண்டிய ரூபாய் 25-ல் பொதுச் செயலாளர் அவர்கள் வந்தபோது கொடுத்த கிளைக் கழகங்கள் தவிர பாக்கி யிருக்கிற கிளைக் கழகங்களும் கொடுத்தவர்களில் பாக்கிவைத்திருப்பவர்களும் கொடுக்கவேண்டுகிறேன்.

பி. கே. சேதுராமன், செயலாளர்
மதுரை நகர தி. மு. க,

நாகப்பட்டினம்

கடந்த 15—5—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு நாகை அவுரித் திடலில் நாகை தி. மு. க.வின் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் கழக துணைச் செயலாளர் எஸ். கல்யாணம் திராவிடம் ஏன் பிரிய வேண்டும்? திராவிடம் பிரிந்தால் வாழ முடியுமா? என்பதுபற்றி பேசியபின்னர் தோழர் எ. எஸ். பாண்டியன் கழகத்தின் கொள்கை வளர்ச்சி பற்றியும் பேசினர். அடுத்து தோழர் ஈ. வி. கே. சம்பத் ஐந்தாண்டு திட்டம் பற்றியும், அகில இந்திய கட்சிகளின் நிலைபற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைபற்றியும், திராவிடம் பிரியவேண்டியதின் அவசியம் பற்றியும் மிகவிளக்கமாக இரண்டு மணி நேரம் விளக்கவுரை ஆற்றினர் தோழர்சம்பத் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை யளித்தார்.

நாகை சர்க்கார் மருத்துவ மனையில் நல்லமுறையில் பணியாற்றிவந்த டாக்டர் சீனிவாசன் B. Sc, M B. B. S அவர்களை இங்கிருந்து மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டவர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் டாக்டர் சீனிவாசனை வெளியூருக்கு மாற்றுமல் இவ்வூரிலேயே பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது என தீர்மானிக்கப்பட்டது.

சம்பத் பாராட்டு

தோழர் சம்பத் அவர்கள் கழக இல்லத்தைப் பார்வையிட்டு பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நாகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை பணியாற்றும் முறைகளை இன்று கண்ணுற்றபோது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன், அறிவுடன் கூடிய ஆர்வம் நாட்டுக்கு எத்தகைய நலம் விளைவிக்கும் என்பதற்கு நாகை தி. மு. க. நல்லதோர் எடுத்துக்காட்டு

நமது கழக முன்னணித் தொண்டர்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்துள்ள நாகை தி. மு. க. நல்ல முறையில் பணியாற்றி வந்துள்ளமைக்கு எனது பாராட்டுதலை உரித்தாக்கிக் கொள்கின்றேன்"

ஒப்பம் ஈ. வி கே. சம்பத்.

சுவைத்துப் பாரீர்—தொடர்ச்சி

தென்னாட்டு 'அய்யப்பன்' சாமிக்கு வடநாட்டு ஹரித்துவாரத்தில் கோயிலாம்! ஒன்றரை இலட்சம் ரூபாயாம்! பஞ்ச லோகத்தில் அய்யப்பன் உள்ளிட்ட 'எழுவர்' சிலைவடிக்கச் செலவானது ரூ. 70,000மாம்!

பாழ்! பாழ்!! பணம் பாழ்!!!

கண்ணற்றோருக்குக் கண் கொடுக்கலாமே—அய்யப்பன் பெயரிலேயே!

கல்வியற்றோருக்குக் கல்வி யளிக்கலாமே அதே அய்யப்பன் பெயரால்!

கஞ்சியில்லாது மடிந்திடும் மக்களுக்கு அய்யப்பா! நீ சிலையாயிருக்காமல், கஞ்சியளித்து பசி போக்கியிருக்கக் கூடாதா?

அய்யப்பர், சிவன்—விஷ்ணு—கணபதி—ஆஞ்சநேயர்—பார்வதிஅம்மை—இலக்குமி அம்மை—சகிதமோடு இவ்வெழுவரும்—கொச்சியிலிருந்து எழுந்து மே மாதம் 23-ம் நாள் ஹரித்துவாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டக் கோயிலில் குடிபுகுந்தார்களாம்! சென்னையிலோ—திருவல்லிக்கேணியில் மகத்தான வரவேற்பு! பூரண கும்பமென்ன! அபிஷேகமென்ன! பக்த கோடிகளின் தரிசனமென்ன!

இங்கிருந்து தில்லிக்குச் சென்று ஒருநாள் தங்கி 'சிரம பரிகாரம்' எடுத்துக் கொண்டு—கடைசியில் ஹரித்துவாரம் சென்றுள்ளார்கள் — ஏழ்மையை நிலைநாட்டப் பாடுபடும் நம் அருமை எழுவர்கள்! எழுவருள் இருவர் மாதர்! மாதர் குலத்திற்கும் பிரதிநிதித்துவம் வழங்கியது வரவேற்கத்தக்கது தான்!

தழுவுங்கள் புத்த மதத்தை !

'அடுத்த ஆண்டு ஜூலையில் புத்தர் பிரானது 2500 வது பிறந்த தினவிழா வரப்போகிறது. அது போது நானும் எனது மனைவியும் புத்த மதத்தைத் தழுவப் போகிறோம் என்பதனை முன்னரே அறிவித்தோம்.

'இந்திய மண்ணில் பரவி வாழும் எனதருமைத் தாழ்ந்த இனத் தோழியர்களே! தோழர்களே! நீங்கள் அத்தனை பேரும் எனது பாதையில் புத்த மதத்தைத் தழுவத் தயாராயிருங்கள்!'—என்ற வேண்டுகோளை டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அண்மையில் விடுத்துள்ளார்.

புத்தரது கொள்கைகளும், போதனைகளும், பாலி மொழியில்தான் எழுதப்பட்டிருக்கிறது. அது போசச் சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலுங் கூட எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையப் பெரும்பான்மையான மக்களுக்குப் பாலி மொழியோ, சமஸ்கிருதமோ, ஆங்கிலமோ அவ்வளவாகத் தெரியாது, ஆதலால் புத்தரது கொள்கைகளையும் போதனைகளையும் ஏனைய பிரதேச மொழிகளில் பெயர்த்து எழுத நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம். அதற்காக வேண்டி அச்சகமொன்றையும் தனித்து ஒதுக்கி வைத்துள்ளார்களாம்.

முதல்படியாக மராத்தி மொழியில் புத்தரது கொள்கைகளையும், போதனைகளையும் மொழி பெயர்த்து அச்சிட்டு வழங்கப் பூனாவில் வேலை துவக்கப்பட்டுவிட்டதாம். இதரப்பணிகளும் தொடர்ந்து நடைபெறுமாம்.

இந்தியா முழுமைக்கும் புத்தரது நற்போதனைகளை விளக்கிச் சொல்ல, இந்தியா சுற்றுப் பிரயாணத்தை மேற்கொள்ளப் போவதாகவும், அதோடு அனைவரையும் புத்தமதத்தில் சேரச் சொல்லி கேட்கப் போவதாகவும் திட்டமிட்டுள்ளாராம் டாக்டர் அம்பேத்கார்.

அதற்காக வேண்டியே ஒரு தனிக் கழகத்தையும் நிறுவி விட்டாராம். அக்கழகத்தின் பெயர் போதி ஜன சங்கம் என்பதாக வழங்கி வருமாம்.

வெல்க அம்பேத்கார் முயற்சி !

குன்றக்குடிப் பக்கம்?

'மன்றம்' பகன்றது : 'சாமி'யை 'ஆசாமி' ஆக்கினர் அறிஞர் அண்ணா! அவர்தான் திரு. ஈழத்து அடிகள் என்று.

ஆனால் குன்றக்குடி அடிகள் கூறுவதை நோக்கின் 'அச்சிரமங்கூட யாருக்கும் வேண்டா! யாமே விரைவில் 'ஆசாமி'யாய் விடுவோம்!' என்று கூறுமளவுக்கு மாறிவிடுவார் என்பதாகத் தோன்றுகிறது

குன்றக்குடிகளது அடி உள்ளத்திலே, தேங்கிக் கிடக்கிறது சுயமரியாதை உணர்ச்சி! அதற்கு அசைவு ஏதும் இதுவரை நிகழாமற் போகவே சற்று பாசி படர்ந்து இருந்ததென்னலாம்! இப்போதெல்லாம் தேக்கம், அசைய ஆரம்பித்து, அலைகிளப்பிக் கொண்டிருக்கிறது!

அடுத்த ஆண்டு கும்பகோணக் குளம்—மகாமகத்தன்று—பொங்கி வழியப் போவதைப்போன்று நம் அடிகளாரின் சுயமரியாதை உணர்ச்சியும் பொங்கி வழிந்தோடப்போகிறது! தமிழ நாட்டிற்கு நல்ல காலம் பிறக்கிறது! பிறந்தும் விட்டது!!

தமிழன் என்ற முறையில் தன்மானங் கொண்டவர். தமிழ் அவரது மூச்சு! அழகு தமிழ் பேசுபவர் அடிகளார்!

தமிழ் நாட்டுக் கோயில்களிலெல்லாம் தீந்தமிழிலேயே பாசுரங்கள் பாடி இறை வணக்கம் செய்திடல் வேண்டுமென்று செல்லுமிடமெல்லாம் சொல்லி வருகிறார்!

தமிழ் நாட்டுக் கோயில்களில் தொத்திக் கொண்டு, தொங்கி நிற்கும் ஆரிய அர்ச்சகர்களெல்லாம் அலறுகின்றனர்! ஆரிய இனமே அர்ச்சகர்களுக்கு அபயமளிக்கத் திரண்டெழுகிறதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

சென்னை ஆங்கில வார இதழ் ஒன்றில் 'வி...நேஸ்வர அய்யரொருவர் கடவுளுக்குச் சமஸ்கிருதம் தெரியாதா? என்று கேட்டுக் குரலெழுப்பி விட்டார்.

பலப்பல இடங்களில் பார்ப்பனர்கள் கூடி அர்ச்சனை சமஸ்கிருதத்திலேயே இருக்க வேண்டும் தமிழாக மாற்றக் கூடாது என்று கூக்குரலெழுப்புகிறார்கள். எப்படியோ தொலையட்டும். நரி இடம் போனாலென்ன; வலம் போனாலென்ன!...

தமிழ் உணர்ச்சியைக் காட்டிக் கொண்டு ஆரிய வெறுப்புணர்ச்சியை அடுக்கிக் கொள்கிறார் அடிகள்!

அதற்குத் துணிவு வேண்டாமா?...துணிச்சல் இல்லாமலா அர்ச்சனை தமிழ்! தமிழ்!! தமிழில்!!! என்று கூறி வருகிறார்! அதைக் காணும்போதுதான் ததும்பி நிற்கும் அவரது தன்மானமும், அதோடும் சுயமரியாதை உணர்ச்சியும் வெளிப்படுகின்றன—என்று கூறுகிறோம்.

அவருக்குத் தன்மான, சுயமரியாதை உணர்ச்சி உண்டென்றால் அதிலொன்றும் ஆச்சரியமில்லை!

அடிகளார் திரு. வி. க.வுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது பாடம் இவருக்கென்ன ஏறியிருக்காதா? திரு. வி. க. அவர்களுக்குச் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தியவர் அடிகளன்றோ!

அதோடு பெரியாரையும் ஈரோட்டில் சந்தித்துப் பேசி யிருக்கிறாரே! தன்மானத்தையும், சுயமரியாதையையும் பெரியார் அடிகளுக்கு ஊட்டாமலா விட்டிருப்பார்?

வெளியே வந்ததும் அடிகளார் கூறவந்ததைச் சற்று மாற்றிச் சொன்னார் : பெரியாரை நம் 'திருக்கூடத்'திற்கு இன்னுஞ் சிறிது காலத்தில் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்—என்று.

அதன் உட்கருத்து என்ன! இனி ஈரோட்டுப் பக்கந்தான் தலைவைத்துப் படுக்க வேண்டும்! குன்றக்குடிப் பக்கம் கால்நீட்ட வேண்டியது தான்! என்பதல்லாது வேறென்ன!

ஏனெனில் அடிகளாருக்கா தெரியாது—பழுத்தோலை குருத்தோலை ஆவதில்லை; ஆனால் குருத்தோலைதான் பழுத்தோலையாகும்!—என்ற உண்மை!

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

16

இதுபோலவே, பாரதக் கதையிலும் கூறப்படுகிறது. தேவேந்திரனைக் காப்பாற்றுவதற்காக பாரத வீரர்களில் ஒருவனான, அருச்சுனன் நிவாத கவசர் காலகேயர் என்பவர்களுடன் போர் தொடுக்கிறான். போருக்கிடையில் தோற்று ஓடுபவன்போல் போக்குக் காட்டி, எதிரிகளின் செயல் ஒழிந்த நேரத்தில் அவர்களைக் கொலை செய்கிறான்.

பின்பு, பாரதப் போரில் ஒரு கொடுஞ்செயல் நடக்கிறது. கிருஷ்ணனுடைய தம்பி சாத்தகி என்பவனும், பூரிசிரவனும் வாட்போர் செய்தார்கள். சாத்தகி பாண்டவர் படையைச் சேர்ந்தவன். பூரிசிரவன் துரியோதனன் படையைச் சேர்ந்தவன். வாட்போரில் பூரிசிரவன் மிஞ்சிவிட்டான். சாத்தகியைக் கீழே தள்ளி வெட்டுவதற்கு வாளை ஓங்குகிறான். இதை கிருஷ்ணன் கண்டு கொண்டான். உடனே அம்பு எய்து பூரிசிரவனுடைய வாள் பிடித்த கையைத் துண்டிக்கும்படி அருச்சுனனை ஏவுகிறான். அதன்படி அருச்சுனன் அம்பெய்து பூரிசிரவன் கையை அறுக்கிறான். உடனே சாத்தகி எழுந்து பூரிசிரவனைத் தலையை வெட்டிச் சாய்க்கிறான்!

இப்படியே துரோணனையும் வஞ்சனையால் கொல்கிறார்கள். 'அஸ்வத்தாமா அதா குஞ்சரா' என்று தருமன் பொய் சொல்கிறான். அதைக் கேட்ட துரோணன் அஸ்வத்தாமன் இறந்துபோனதாகக் கருதி போர் முனையில் நிலைதடுமாறி நிற்கிறான். அப்போது திருஷ்டத் தூய்மன் என்னும் பாண்டவர் படையைச் சேர்ந்தவன் திடீரென்று அம்பு எய்து துரோணனைக் கொல்கிறான்.

பாண்டவர்கள் மாத்திரம்தான் இப்படிப்பட்டவர்கள் என்று சொல்வதற்கில்லை. துரியோதனாதியரும் இத்தகையோரே!

13-ம் நாட்போரில் துரியோதனன் படைகள் சக்கர வியூகமாக (படைகளை சக்கரம் போல் அணிவகுத்து நிறுத்துதல்) வகுக்கப்படுகிறது. அதன் நடுவில் தனியாகப் போராடப் போய் அகப்பட்டுக் கொள்கிறான் அர்ச்சுனன் மகன் அபிமன்யு. அவனை கர்ணன், துரோணன், சயிந்தவன் முதலான துரியோதன படைத்தலைவர்கள் நாற்புறமும் சூழ்ந்து கொண்டு கொன்றார்கள். மறுநாள் 14-ம் நாட் போரில் சயிந்தவனை எதிர்பாராவிதமாக அம்பெய்து கொல்கிறான் அருச்சுனன். மூதாதையான வீட்டுமனை சிகண்டி என்பவனும் அருச்சுனனும் கூடிப் போரிட்டு குற்றுயிராகக் கிடத்திவிடுகிறார்கள்!

இதுபோன்ற வஞ்சனையும் பேடித்தனமும் புரிந்து கொல்லும் கொலைகாரர்கள் வீரர்களாம் — நீதிமான்களாம் — அவதார புருஷர்களாம்!

இச் செயல்கள் புராண இதிகாசங்களில் மட்டுமல்ல—பிற்கால வழக்கத்திலும் 'இராசதந்திரம்' என்கிற பேரால் இத்தகைய அக்கிரமச் செயல்கள் வடவர்களிடையே மதிக்கப்பட்டு வந்துள்ளன! இதனை, சிவாஜியின் சரித்திரம் வலியுறுத்துகிறது.

தாதாஜி கண்டதேவர் என்பவர் மராட்டிய மன்னன் சிவாஜிக்கு வளர்ப்புத் தந்தையாவார். அவர், சிவாஜிக்குக் கூறிய புத்திமதிகளில் அடியிற்கண்டவை இங்கு ஆராயத்தக்கன:

"இரண்டு பகைவர்கள் உன்னை எதிர்த்தால் அவர்களில் ஒருவனுடைய நட்பைப் பெற்று நன்மையடை! வலிய பகைவனை வெல்லவேண்டுமானால், அவனுக்கு இணங்கி வணங்குவதுபோல நடித்து ஒழிக்கும் வழியைத் தேடு"

இந்தப் புத்திமதிகளில் வீரமும், அறமும், தினையளவுகூட இடம் பெறவில்லை. அவைகளுக்குப் பதிலாக வஞ்சனையும் சூழ்ச்சியும் இடம் பெற்றுள்ளன. சிவாஜி இந்தப் புத்திமதிப்படியே நடந்திருக்கிறான். ஒரு சமயம் ஔரங்கசீப்பின் படைத் தலைவன் மராட்டியத்தை முற்றுகையிட வந்தான். அவனோடு. சிவாஜி சமாதானம் செய்து கொண்டதுபோல் நடித்து, அவனைக் கட்டித் தழுவுவதுபோல் தழுவி 'புலிநகம்' என்னும் இருவகை ஆயுதத்தால் ஔரங்கசிப்பின் தளபதியை கிழித்துக் கொன்றான் என்று அவனுடைய வரலாறு கூறுகிறது.

இத்தகைய கொடுஞ்செயல் புரிவோரை வீரர்கள் என்று தமிழிலக்கியங்களில் காண முடியாது. தமிழில் அறமும், வீரமும் எக்கால அறிஞர்களும் ஒப்புக் கொள்ளத்தக்க விதத்தில் கூறப்பட்டுள்ளன. அவைகளை முறையாக இங்கு ஆராய்வோம்.

தமிழகத்தில், முடியுடை வேந்தர் மூவரும் அரண்மனை வாசலில் அசையாமணி கட்டுவித்திருப்பர். அரசனை அவசரமாகக் காண விரும்புவோர், அசையா மணியை அசைத்து அடிப்பர். அந்த மணி நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிபரப்பும் பெருமையுடையது. எனவே, அந்த மணியோசை கேட்ட உடனே அரசன் ஓடோடி வருவான், அல்லது ஏவலரைவிட்டு மணியடித்தோரை அழைத்துவரச் செய்வான். பின்பு விசாரிப்பான். அவர்க்கு நேரிட்ட குறைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வான்.

அரசனை மக்கள் அவசரமாகக் காண விரும்பினால், ஏதாவது அநீதி, அச்சம் இவைகளின் காரணமாக இருப்பதோடு, அது, அரசாங்க அதிகாரிகளால் தவிர்க்க முடியாததாகவோ, அல்லது அதிகாரிகள்—அரச பரம்பரையினரின் அநீதச் செயல்களாகவோ இருப்பது இயற்கை. நீதியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த தமிழ் வேந்தர்கள், அசையாமணி ஓசை கேட்டதும் நடுங்காத நெஞ்சத்தில் நடுக்கம் கொண்டு விடுவார்கள். தம்முடைய செங்கோலுக்கு இழுக்கு வந்ததாக நினைத்து பதறினார்கள். இதுபோலவே அசையாமணி ஓசை கேட்டதும் குடிகளும் பதறி நடுங்குவார்கள். ஆதலால், மிகப் பெரும் அவசர சமயத்திலன்றி அசையா மணியை யாரும் அசைப்பதில்லை. இது தமிழ் வேந்தர்களின் பெருமைக்கு எவ்வளவு எடுத்துக் காட்டாகும் என்பதை உய்த்துணர்வாராக. இதனை:

"செங்கோலும் வெண்குடையும்
செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்றன் கொற்றவாயில்
மணிநடுங்க நடுங்கும் உள்ளம்"

என்று கோப்பெருந்தேவி தீய கனாக்கண்டு அரியணை மேலிருந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பதாக உள்ள சிலப்பதிகாரம் வழக்குரை காதை செய்யுட்களும்;

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்[தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே......?

என்று, சிலப்பதிகாரம் வழக்குரை காதையில் கண்ணகி தனது நகரின் பெருமையை கூறுமுகத்தான், தனது மன்னனின் செங்கோல் முறைமையும் 'சேர்த்துக் கூறுவதாக உள்ள செய்யுட்களும்;

"ஆடும் கடைமணி நாவசை யாமல்
அகிலம் எங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரான் இந்த
நீள்நி லத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன்
பதாம்பு யத்தைச்
சூடும் குலோத்துங்கச் சோழன் என்றே
எனைச் சொல்லுவரே"

என்று ஒட்டக்கூத்தரும், சோழர் குலோத்துங்கனும் சேர்ந்து பாடியதாக இருக்கும், தனிப்பாடல் திரட்டிலுள்ள பழம்பாடலும் உறுதி செய்யும்.

பண்டையத் தமிழ் மன்னர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்றுவகை முரசம் இருக்கும். ஒன்று நீதி முரசு; மற்றொன்று கொடை முரசு, இன்னொன்று படைமுரசு; செங்கோலின் திறம் அறிவிக்க நீதிமுரசம் ஒலிக்கும். கொடைத்திறம் அறிவிக்கக் கொடைமுரசம் ஒலிக்கும். படைத்திறம் அறிவிக்கப் படைமுரசம் ஒலிக்கும். இவைகளில் படைமுரசம் மிக்க பெருமை வாய்ந்ததாகும். அதனை தெய்வம் போல்போற்றுவர்.

கொடும்புலி ஒன்றை தனிமையில் எதிர்த்துக் கொம்பினால் குத்திக் கொன்றொழித்த—வீரம் செறிந்த காளைமாட்டைப் பாதுகாத்து, அது தானாக இறந்த பிறகு, அதன் தோலை மயிர் களையாமல் பிரித்தெடுத்துச் செய்யப்படுவது வீர முரசமாம். போரில்லாத காலங்களில், அரண்மனையில் அதற்கென அமைக்கப்பட்ட மணியாசனத்தில் வீரமுரசம் வீற்றிருக்கும். போரின்மேல் படைகள் புறப்படும்பொழுது அந்த முரசம் யானைமீதேறி வீர முழக்கமிட்டு முன்னே செல்லும். படை வீரர்கள் அணிவகுத்துப் பின்னே செல்வர்.

என்னை முன் நில்லன்மின் தெவ்விர்! பலர் என்னை'
முன்னின்று கன்னின்றவர்'

என்கிற வள்ளுவர் வாய்மைக்கிணங்க பகைவருக்கு எச்சரிக்கை செய்யப்படும். தமிழர்கள் பகைவருக்கு எச்சரிக்கை செய்யாமல் எந்தத் தீங்கும் செய்யமாட்டார்கள்.

அந்த எச்சரிக்கைகள் ஐந்து விதமாக, அடையாள முறையாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்று வகுக்கப்பட்டுள்ளன.

பகைவர் நாட்டுப் பசுமந்தைகளை மடக்கிக் கைப்பற்றச் செல்லும்போது வீரர்கள் வெட்சிமாலை அணிந்திருப்பர்.

பகைவர்மேல் போரிடச் செல்லும்போது வீரர்கள் வஞ்சிமாலை சூடி இருப்பர்.

பகைவருடைய அரண், கோட்டை கொத்தளங்களை அழிக்கச் செல்லும்போது வீரர்கள் உழிஞை மாலை பூண்டிருப்பர்.

பகைவரை எதிர்த்துப் போரிடும்போது படுகளத்தில் வீரர்கள் தும்பைமாலை சூடுவர்.

பகைவரை வென்றபோது வீரர்கள் வாகை மாலை அணிந்து மகிழ்வர்.

மேலே கண்ட மாலை அடையாளங்கள் பகைவனிடம் இன்ன வகையில் போர் தொடங்குகிறோம் என அறிவிப்பனவாகும்.

போராடச் சென்ற வீரர்கள் களத்தில் முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டார்

கவிதை இது!

இரா, பரமசிவம், பண்ருட்டி

பகைவென்ற முத்தமிழை வளர்க்க; ஏழைப்
பாலகர்கள் கல்விகற்க; உழவு செய்ய
வகையான தொழில்வளர்க்க; எளியோர் வாழ;
மேல்நாட்டுக் கலைவளர்க்கப்; பொருள்கொ டாது
சிலைவளர்த்து; சாம்பல்பூசி; "வாழ்வு மாயம்"
சொல்லிவரும் கயவர்க்கு; தாசி கட்கு;
குலைபெயர்ந்து; கடவுளாகி வந்த, பாறைக்
கல்லுக்கு ஈவதை விலக்கு. அஞ்சேல்!

*

உலவுதற்குப் பொதிகையுண்டு; மூழ்கி யாட
உயர்பொன்னி நதியுண்டு; நெல்வி ளைக்க
நிலமுண்டு; சுகம்விளைக்க தென்றல் உண்டு;
நீதிசொல்ல குறள்உண்டு; சுவைக்க வாழைக்
குலையுண்டு; கடலுண்டு முத்தெ டுக்க;
கொண்டாட பொங்கலுண்டு; காதல் கற்க
கலைநூற்கள் உமக்குண்டு. பிறநாட் டாரை,
உமக்குண்டோ! என்பாய்உடை யதைவிளம்பு.

கடல்அணைக்கும் குமரியிலே; பிறந்து கூடல்
கவின்பொற்ற மரைக்குளத்தில் வளர்ந்து; சோழன்
மடிமீது கொஞ்சியாடி; பொதிகைச் சாரல்
வலம் வந்து; புலவர் நாவில் கவிதை தந்து;
திடவீரன் சேரன்தோள் ஏறி நின்று;
திருவள்ளு வன்;இளங்கோ கரம்த வழ்ந்த
உடைமையான தமிழிருக்க—இந்தி கற்க
உரைத்தால் அவ் எண்ணெழுத்தை இகழ். நீ
[அஞ்சேல்

*

பொன்னேடாம் சங்கத்தமிழ் நூல்கள்; நல்லப்
புதுமைஏடாம் 'புரட்சிக் கவி' கவிதை; வற்ற
இன்பத்தை; நீதிதன்னை; வாழக்கை தன்னை;
இன்னும்பல வாம்உலக இயல்பைக் கூறும்;
தென்புலவன் வள்ளுவனின் உயிர்ப்பு தையற்;
திருக்குறளை ஓதாமல்—பார்ப்ப னர்கள்
பண்ணிவைத்த இராமாயணம்; கீதை; சொத்தைப்
பாரதத்தை ஓதுவதை ஒழிக. அஞ்சேல்!

கள். அப்படிப் பின் வாங்குவது வீரத்திற்கு இழுக்கென்று கருதப்படும்.

எதிரிகளின் ஆயுதங்கள் தம்மைநோக்கி வரும்போது விழித்த கண்களை இமைப்பதும்கூட வீரத்திற்கு இழுக்கென்று வெம்போர் மறவர் கருதுவர்.

"விழித்தகண் வேல்கொண் டெறிய
[அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்கண் ணவர்க்கு"

என்னும் திருக்குறள் இதற்குச் சான்ருகும். போர்முகத்தில் முன்னின்று முகத்திலும் மார்பிலும் புண்பட்ட வீரனை எல்லாரும் போற்றுவர்—விழுப்புண்பட்டான்—என்று பெருமைப் படுத்துவர்.

குழந்தை இறந்து பிறந்தாலும், அம்மிக் குழவிபோல ஊன்தடி—மனை பிறந்தாலும், போர்கிட்டாமல் வாழ்நாள் முழுதும் இருந்து நோய் கொண்டு இறந்தாலும் அத்தகையோரை—பிணத்தை வாளால் பிளந்து பின்பு அடக்கம் செய்தல் வீரர்களின் மரபு. இதனை அடியில் வரும் புறப்பாட்டால் அறியலாம்.

'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின்இடர்ப்படுத்துஇரீய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத்தணியத்
தாமிரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ! இவ்வுலகத் தானே'
(புறம் 74)

இப்பாட்டு சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவனுல், பாடப்பட்டதாகும். இதற்குப் பொருள் தெரியுமுன், இதை, அவன் எதற்காக—எந்த இடத்தில் பாடினுன் என்று தெரிந்து கொண்டால், தமிழர்களின் மான உணர்ச்சியும், வீரத்தருக்கும் எத்தகையதென்று தெரிந்து கொள்ளலாம்.

சோழவேந்தன் செங்கணுன் என்பவனும், சேரவேந்தன் கணைக்கால் இரும்பொறை என்பவனும், திருப்போர்ப்புறம் என்கிற இடத்தில் கடும்போர் நடத்தினர். அதில் சேரமான் தோற்ருன்—பிடிபட்டான் அவனை குடவாயில் கோட்டம் என்ற இடத்தில் சிறைவைத்தான் சோழவேந்தன்.

போர்க்களத்தில் கொல்லப்படுவதைவிட சிறைப்படுவதைக் கடுந்தண்டனையாகக் கருதுவது தமிழர் மரபு. எனவே, சேரமான் ஆருத்துயரத்தில் ஆழ்ந்திருந்தான். சிறையை காவல் புரிந்தவனே பண்பில்லாதவன். இந்த நிலைமையில் ஒருநாள் சேரனுக்குத் தண்ணீர்த்தாகம் அதிகமாக இருந்தது. சிறைக் காவலனிடம் தண்ணீர் கேட்டான். அவனே, அசட்டையாக நேரங்கடந்து தண்ணீர் கொடுத்தான். ஆனுல் சேரன் அந்தத் தண்ணீரை வாங்கிக் குடிக்கவில்லை. தன்னைப் போர்க்களத்தில் கொன்றுவிடாமல் நாயை கட்டியதுபோல் சங்கிலியால் கட்டி சிறையிலிட்ட பகைவனிடம் தண்ணீரைக் கூட இரந்துண்டு வாழ்வதா? என்று அவனுடைய உள்ளம் குமுறியது. அப்போது மேலே கண்ட பாடலைப் பாடி உயிர் நீத்தான். பாட்டின் பொருள்;

குழந்தை இறந்து பிறப்பினும், தசைத் தடியாகிய மனை பிறப்பினும், அவைகளை ஆளல்ல என்று கருதிப் புறக்கணித்துவிடாமல் வாளால் பிளந்து அடக்கம் செய்யும் வீரமரபில் வந்தேன். பகைவனுடைய வாளால் இறந்துபடாமல், சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்போலப் பிணிபட்டு துன்பப்படுகிற நான் நண்பன் அல்லாத பகைவனிடம் தண்ணீரை இரந்துண்ண மாட்டேன். வயிற்றுப் பசிக்காக இரந்துண்ணும் மகனையா, சேர வேந்தன் ஊன்தடி பிறந்தாலும் வாளினுல் பிளந்து அடக்கும் வீரர்குலம் பெற்றிருக்கும்? இராது என்பதாம்.

சோழன் செங்கணுன், செத்துப் பிறந்த குழந்தை. ஊன்தடி, இவைகளுக்குத் தரும் பெருமைகூடத் தரவில்லை. அப்படிப் பெருமைப்படுத்த எண்ணி யிருந்தால் போர்க்களத்தில் கொன்றிருப்பான் என்பது கருத்து

போரில் புறங்கொடாது நின்று உயிர் நீத்த மாவீரனுக்கு வீரக்கல் நாட்டி, அவனை நினைவு படுத்துவது தமிழர் மரபு, புறங்காட்டி ஓடினுலும், புறப்புண்பட்டுத் திரும்பினுலும் தமிழ் வீரர் ஏசுவர். புறப்புண்ணைக் காணும்போதும், அது தழும்பான போதும்—வடுவைக் கண்டபோதெல்லாம் இழித்தும் பழித்தும் பேசுவர். ஆதலால் மானமுள்ள வீரர்கள் புறப்புண்பட்டு உயிர் வாழ்ந்திரார். இதனை, அடியில் வரும் புறநானூற்று வரலாறு உறுதி செய்யும்.

வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் சோழன் திருமாவளவன் கரிகாலனும், சேரன் பெரும் சேரலாதனும் போர் செய்தனர். போர் முடிவில் சேரலாதன் முதுகில் எப்படியோ சோழனுடைய ஆயுதம் பட்டுப் புண்ணுகிவிட்டது. சோழன் வெற்றிபெற்று வாகை சூடுகிருன்,

முதுகில் புண்பட்ட பெருஞ்சேரலாதன் மனம் உடைந்து விடுகிருன். அந்தப் புண் தனது வீரத்திற்கு மாபெரும் இழுக்கென்று கருதுகிருன். அக் காலத்தில் மானக்கேடு சம்பவித்தால் ஊண் உறக்கம் இல்லாமல் வடக்கு முகமாக இருந்து உயிரைப் போக்கி விடுவது மான வீரர்களின் வழக்கம். அந்த வழக்கப்படி பெருஞ்சேரலாதனும் வடக்கிருந்து உயிர் விடுகிருன்.

—(தொடரும்)

பொள்ளாச்சி

15—5—55-ல் தி. மு. கழகத்தின் செயற்குழு கூட்டம் செயலாளர் அ. ச. பாலு தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் இதுவரை பொதுச் செயலாளராகப் பணியாற்றிய அறிஞர் அண்ணு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு புதிய பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டுவதெனவும், கழக செயற்குழு உறுப்பினர் கந்தசாமி அவர்களின் தந்தையார் திரு கே. எஸ். சங்கரஞ் செட்டியார் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்தும், திருச்சி ஜி.எஸ். நாடக மன்றத்தார், கழக நிதிக்காக 'இருட்டறை' என்னும் நாடகம் நடத்தியுதவியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் மேற்படி நாடகத்தில் வசூலான நிதியில் இதுவரை ஏற்பட்டுள்ள செலவுபோக மீதியை ஒலிபெருக்கி வாங்கும் சேமிப்பு நிதியாக பாங்கியில் போட்டு வைப்பதெனவும், விரைவில் எட்டணு உறுப்பினர் கூட்டம் நடத்துவதெனவும், மாநில மாநாட்டு நிதி வசூலிக்க தோழர்கள் பி. என். இராமானுசம், க. துரைக்கண்ணன், பி. கே. முத்து ஆகியோரை நியமிப்பதெனவும், கழகத்தின் கொள்கைகளுக்கும், கட்டுப்பாட்டிற்கும் புறம்பாக நடந்து கொண்ட தோழர்கள் கே. வேலாயுதம், க. முத்தழகன் இருவரையும் எட்டணு உறுப்பினரிலிருந்தும் நீக்குமாறு பொதுச்செயலாளரைக் கேட்டுக் கொள்வதோடு அவர்களுக்கும் கழகத்திற்கும் இனி எவ்வித சம்பந்தமுமில்லையென பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்வதெனவும் தீர்மானங்கள் நிறைவேறின,

அருப்புக்கோட்டை

பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கைப்படி 12—5—55-ம் நாள் இரவு 8 மணிக்கு தியாகராயர் வாலிபர் சங்க மூன்பாக மேதின பொதுக் கூட்டம் ச. அ. முத்துச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் பி. பி. என். நல்லதம்பி சோ. முத்துராமலிங்கசேது ஆகியவர்கள் பேசியபின் கடைசியில் பலத்த கைதட்டல்களுக்கிடையே கவிஞர் எம். எஸ், இராமசாமி அவர்கள் 'மேதினமும் தி. மு. கழகமும்' என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். நகர கிளை செயலாளர் அ. சுப்பிரமணியம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

*

வெள்ளைக்கோட்டை பாரதிதாசன் தெருவில் பகுத்தறிவு மன்றத்தின் சார்பாக 8—5—55 மாலை 5 மணிக்கு மேதின விழா நடைபெற்றது. விழாவிற்கு நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர் எஸ். பி. சாமி, தலைமை தாங்கினர். தலைவர் அவர்கள் முன்னுரையில் 'மேதினமும் பகுத்தறிவு மன்றமும்' என்னும் பொருள்பற்றி நீண்டதோர் கருத்துமழை பொழிந்தார்.

அடுத்து நகர கிளை தி. மு. க. செயலாளர் அ. சுப்பிரமணியம் கழகக் கொடியினை ஏற்றுவித்து விரிவான சொற்பெருக்காற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் மன்ற செயலாளர் மா. சி. சுந்தரமகாலிங்கம் நன்றிகூறி குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வழங்கினர்.

அரிமழம்

தி. மு. கழக சார்பாக மேதின விழா 14-5-55 சனியன்று தோழர் தாஞ்சி மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி சம்பத் 'சமுதாயமும்—நமது நிலையும்' என்ற பொருள் குறித்து நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

படிக்கிறீர்களா?
திராவிட இயக்கத்தின்
அரசியல் கருத்துகளை
சமுதாயக் கொள்கைகளை
பொருளாதாரத் திட்டங்களை
தெள்ளத் தெளிய
விளக்குகிருன்
தம்பி
ஆசிரியர்
தில்லை வில்லாளன் எம்.ஏ
வாரந்தோறும் வெளிவருகிறது
தனியிதழ் 2 அணு
விபரங்களுக்கு எழுதுங்கள்
தம்பி அலுவலகம்
சிதம்பரம்

சுமைதாங்கி...தொடர்ச்சி

நான். எனக்குத்தான் அவளும் காத்துக்கிடந்த அவள் தந்திருக்கிறுள் இறுதி உறுதி!

"உன்னிடம் மட்டுமா—என்னிடங் கூடத்தான்! உன்னையே திருமணம் செய்து கொள்ளுகிறேன். இது அவளுக்கு வேடிக்கைமொழி மட்டுமல்ல, வாடிக்கைமொழியுங் கூட! சரச நேரத்திலே சத்தியம்! காணிக்கையை எதிர்பார்க்கும் பூசாரியும்—காசை எதிர்பார்க்கும் பூவையும்...கனிந்த குரலிலே தான் பத்தினி ரத்தினம் போலப் பேசுவர். இதை பிரமாதப் படுத்தி இதயக் கப்பலை இருண்ட தீவிலே கொண்டுபோய் மோதுகிருயே! உன்னைப்பார்...உலகைப்பார்!"

"உபதேசம் போதும். விஷத் துளிகளால் நீ என்னை பூஜிக்கிருய். உன் கற்பனைக் கதையை விரும்பிப் படிக்கும் அவ்வளவு கேடுகெட்ட ரசிகனல்ல நான். உன்னைப்போல 'கலப்படம்' செய்து பேசத் தெரியாவிட்டாலும், நீ கட்டுக் கதைதான் கூறுகிருயென்பதைப் புரிந்துகொள்ள என்னுல் முடியும்!"

...பெரு மழை ஓய்ந்து கொண்டிருந்தது; மின்னெளியிலே அந்தப் பாழடைந்த மாளிகையை திரும்பிப் பார்த்துவிட்டு ஓட்டமும் நடையுமாக நடந்து கொண்டிருந்தான் சேகர். அவனைத் தொடர்ந்து பாலத்து வாசியும். பன்னீர் தெளிப்பது போல நீர்த் துளிகள் விழுந்து கொண்டிருந்தன. சட்டைப்பையிலிருந்த கைக்குட்டையை உற்றுப் பார்த்தான் பாலத்துவாசி. சிரித்துக் கொண்டே கைக்குட்டையை இழுத்து உற்றுப் பார்த்தான். கைக்குட்டையின் ஒரு மூலையிலே 'வனஜா' என்ற பூவிலே எழுத்து மின்னிச் சிரித்தது...தாரகை ஒளியிலே நன்ருகத் தெரிந்தது. அலட்சியப் பார்வையை வீசிக் கொண்டே பாலத்துவாசி பேசினுன்.

உனக்கும் தந்து விட்டாளா அவளது வழக்கமான இந்தப் பரிசை!

"என் உன்னிடமுமிருக்கிறதோ?" அந்த ஆணித்தரமான கேள்விக்கு வாயால் பதில் தரவில்லை பாலத்துவாசி! சட்டைப் பையிலே மடித்து வைத்திருந்த கைக்குட்டையை விரித்துக் காட்டினுன். அவசரத்தோடு இழுத்துப் பார்த்தான் சேகர். இரண்டு கைக்குட்டைகளையும் திரும்பத் திரும்ப ஒத்துப் பார்த்தான். இரண்டும் அவளுடையதுதான். வனஜாவின் நீலநிறக் கைக்குட்டை பாலத்துவாசியிடம்! இதன் உள்அர்த்தத்தை புரிந்துகொள்ள அவனது அவசர நெஞ்சு துடிதுடித்தது. அந்த ஜோடிக் கைக்குட்டைகளோ காற்ருேடு கலந்து ஆடிக் கொண்டிருந்தன!

[ஏழு நாட்களுக்குப் பின் மிகுதிப் பகுதி]

பொன்னுன நேரத்தைப் பொசுக்கி 'அம்மாமி'க் கதை பேசும் பொழுது போக்குக் கதையல்ல 'சுமைதாங்கி'. பொதுவான வாழ்வுச் சிக்குகளை விளக்கிக் காட்டும் சுவையான நெடுநாவல். படியுங்கள்...படியுங்கள் வாழ்வுப் புதிருக்கு விடை கிடைக்கும்!

அஞ்ஞானங்கள்...தொடர்ச்சி

பலத்தை விரித்து எல்லாத் துறைகளிலும் ஆணவம் காட்டி வந்த அநீதிகளுக்கு ஓரளவு முற்றுப் புள்ளி வைக்கத் துவக்கப்பட்டது தான் வகுப்புவாதம், அதாவது வகுப்பு வெறியை ஒழிக்க வகுப்புவாதம் என்ற மருந்து உபயோகிக்கப்பட்டது! இல்லாவிடில் இந்த சிவஞானங்கள் அரசியலில் குறைந்தபட்ச கொலு பொம்மைகளாகக்கூட உலவிவர வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்பதை உணர வேண்டுகிருேம்.

அடுத்தபடியாக குடியரசுக்குட்பட்டதும் நாட்டைத் துண்டிக்காத வகையிலும் தமிழகம் ஓர் அங்கமாக இயங்கிவர வேண்டுமென்பதே தமிழ்நாட்டுக் காங்கிரசின் அடிப்படைக் கொள்கையாயிருக்கும் போது அதே கொள்கைதான் எம்முடைய தமிரசு கழகத்திற்கும் என்று அரசியல் தன்மானமின்றி (காங்கிரஸ் கழுத்தைப் பிடித்துத்தள்ளிவிட்டபின்னரும்) பேசுவதும், அதற்கொரு கட்சியை நடத்துவதும் எதற்காக?

இந்தத் தமிழரசுக் கழகம் என்பது வகுப்பு வெறியர்களின் பாதந் தாங்கியாயிருந்துகொண்டு தமிழகத்திலேயே தமிழர்களுக்கும் துரோகம் செய்து அவ்வப்போது மூக்குடைபட்டு முகாரி ராகம் பாடலாமாயென்று கேட்கிருேம். அல்லது ஆச்சாரியார் போன்றவர்கள் பதவிக்குவந்தால் பல்லையிளித்து பதிகம் பாடுவதும் காமராஜர் போன்றவர்கள் ஆட்சி பீடம் ஏறிஞல் வரட்டுக் கூச்சல் போடுவதற்குந்தான் உங்கள் தமிழரசு கழகமாயென்று கேட்கிருேம்.

இவ்வளவு அவலட்சணங்களைக் கொண்ட ஒரு கோஷ்டியுடன் மகத்தான அமைப்பு முறை வாய்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் பேச்சுவார்த்தை நடத்தவோ அல்லது ஒன்று சேரவோ ஒப்புதல் அளிக்குமா யென்பது யோசிக்கப்படவேண்டிய பிரச்னையாகும்.

ஆனுல் தோழர் சிவஞானமோ தனது எஜமானர்களாகிய வகுப்பு வெறியர்களுக்கு குனிந்து கொடுத்து நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதில் சிறிதும் தவறமாட்டேன் என்பதைத் தெரிவிப்பதற்காக இப்படி விழுந்தடித்துக் கொண்டு பிற கட்சிகளைப்பற்றி பொறுப்பின்றி வம்பு பேசுகிருர்!

என்ன செய்வது—குட்டையில் ஊறிய மட்டையும் அந்தகுட்டையின் வாடைதானே வீசும்? தோழர். சிவஞானம், தனது அரசியல் குரு என்று சொல்லிக் கொள்ளும் ஆச்சாரியாரே கண்டவாறு அறிக்கை விடுவது அபிப்ராயம் கூறுவது ஆன காரியங்களில் இறங்கி மூக்குடைபடும் போது சின்னதுகளுக்கும் அந்தப் புத்திதானே யிருக்கும்?

—நக்கீரன்

ஜூலை 1-முதல் வெளி வருகிறது

'களஞ்சியம்'

(தி. மு. க. மாத இதழ்)

தனிஇதழ் அணு 4. ஆண்டுசந்தா ரூ. 3.

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

களஞ்சியம்

4, பரமானந்த முதலிதெரு, சென்னை-1

பூங்கொத்துகள்—தொடர்ச்சி

கியம். பொலிவு பெற்றதில்லை.

ஆனுல் சுரதாவோ வளமான தமிழ் நடையை வளர்த்துக் கொண்டிருக்கிருர். அந்தத் துறையிலே அவர் முறையாக பாடம் கற்றவர். ஆயிரமாயிரம் நூற்களை எழுதி எண்ணற்ற எல்லைக் கற்களை சுரதா பெற்றவரல்ல! மறுமலர்ச்சியாளர்கள் கலையுலகில் பவனிவரும் முன்னர் கவிஞரின் எழுத்துக்கள் அங்கேநல்லதொருசாதனையைப் படைத்திருக்கின்றன. முரசொலிப் பதிப்பகத்தார் வெளியிட்ட 'தொடாத வாலிபம்' சுரதாவின் சுவையான இலக்கியப் படையல்—இனிப்பிலே பிழிந்தெடுத்த எழுத்துச் சித்திரங்கள் தமிழுக்கே புது வாழ்வு தருவன. கவிதையின் ஆற்றலோடு பொங்கிப் புரளும் பிரவாகமாக தமிழ் அலையோட்டமிடுகிறது அவரிடம் சுரதாவின் நடை, இலக்கியத்தில் இன்றுள்வரை யில்லாத சாதனை. இதுமிகையான புகழ்ச்சியல்ல. 'தோல்மயக்கம்' 'நெருப்போடுஒப்பந்தம்' 'தொடாத வாலிபம்' போன்ற சித்திரங்கள் நல்ல தமிழின் பழுதில்லா படைப்புகள்! 'தோல்மயக்கத்தில்' அம்பிகாபதி மனம் கவர்ந்த அமராவதிக்கு மடல் தீட்டுகிருன்...

"அத்திப்பழமே! அரும்பிலே உன் புதுச்சிரிப்பு அல்லியிலே உன் உதடு. கரும்பிலே உன் பேச்சினிமை கனவிலே உன் அங்கம், அதன் அந்தரங்கம். இவைகளைக் காண்கிறேன். குளிர்ச்சி அடைகிறேன்.

ஊரார் எனக்கு என்னென்ன உதவியெல்லாமோ இங்கு செய்து வருகின்றனர். ஆனுல் எனக்கு வேண்டிய இரவு உதவியை—விழியின் இருட்டிலே வளரும் கனவுதான் விடாமல் செய்துவருகிறது.

அந்தப்புரத்தில், அரும்பு மஞ்சத்தில், ஒற்றையாகத் தூங்கும் உன்னை ஒவ்வொரு தூக்கத்திலும் கனவு என்னிடம் கொண்டுவந்து ஒப்புவிக்கிறது...

முத்து — மரகதம் — மாணிக்கம்—முழுப்பவளம் — கரும்பு —காம்புக்கனி —கட்டி வெல்லம்—இந்த எட்டுப் பொருளே! நான் கௌவிக் குடிக்கும் குடத்தின் உதடே!

"ரத்த தேசம்" இது ஒரு நாட்டின் பெயரல்ல! நான் எழுதிய காவியத்தின் தலைப்பு.

இதில் கடவுள் என்னும் கதாபாத்திரமே கிடையாது ஆனுல் 'ஆண்டவன் இல்லாத இடமே எங்குமில்லை—என்று கூறிவிட்டு, பிறகு கோவிலைக்காட்டி எல்லாம் செய்யவல்ல இறைவன் இங்கே தான் இருக்கிருர், எல்லோரும் வந்து வணங்குங்கள்' என்று கூறுகிருயே எங்கும் தங்கியிருக்கும் காற்றை இந்த இடத்தில் மட்டும்தான் இருக்கிறதென்ருல் நீ புத்திமானு! பைத்தியக்காரனு! இல்லை மனித மோசக்காரனு! என்று கடவுள் பிரியனைக் கேட்கிறேன்.

'கடவுளை நினைக்காமலிருக்கலாமா என்று நீ கேட்கலாம்!

மீன் குளிக்க வேண்டுவதில்லை! அது தான் தண்ணீரிலேயே இருக்கிறதே!

....

சோழன் மகளே!

எனது புதிய புகழை முதலிலும், பொதியமலைச் சந்தனத்தின் வாசனையை இரண்டாவதாகவும், அனுப்பிவைத்து —பாண்டிநாட்டு பச்சரிசியில் உன்னைப் போல செய்து வைத்திருக்கும் உருவத்தை மூன்ருவதாக எடுத்துக்கொண்டு நான்குநாட்களில் ஐந்து யானைகளோடு பல்லக்கிலே புறபபட்டு வருகிறேன். அன்று நிலவின் ஆருவது நாள். இதை நினைவு வைத்துக்கொள். அந்த நிலவு உன் நெற்றிக்கு நேராக வரும் நேரத்திலே, உன் கோலமுகத்துக்கு நிலமுக்காடு கொடுத்து காய்ந்துகிடக்கும் அந்த பாம்பு நதியின் மணல் மெத்தையிலே வந்து படுத்திரு."

இந்த வரிகளிலே வானமளந்த தமிழின் இசையொலி கேட்கிறது. கம்பீரமும் கவர்ச்சியும் மோகனத்தின் எல்லைகளை தொட்டுச் செல்லுகின்றன. இன்றுள்வரை சந்தித்திராத புதுத்திருப்பம். —புதிய பாணி—புதிய சொல்லாட்சி... இது சுரதா தந்த தமிழ்!

'எப்போதும் இருப்பவர்கள்' இறவாப் புகழ்பெற்ற நல்லறிவாளரின் வாழ்க்கைத் தொகுப்பு. ஆஸ்கார் ஒயில்டு, புஷ்கின், ஆஸ்ட்ரோ இவஸ்கி, கன்பூசியஸ், வில்லியம் ஒயில்டு ஆகியோரின் சரிதங்களை சுவைபட—வரலாறு தீட்டுவோரின் வழிகாட்டியென சுரதா எழுதியிருக்கிருர் இதனை.

சுரதா தரும் தலைப்புகளில் கூட புதுமையான உணர்ச்சி இழையோட்டமிடுகிறது. நெருப்போடு ஒப்பந்தம், தேம்பிய குறை, கரும்பில் கனல் ஏடு, சுடாத இரவு, இத்தகு எண்ணற்ற தலைப்புகளின் கீழே அவர் நினைவுகளை வடித்திருக்கிருர்.

'சாவின் முத்தம்' 'உதட்டில் உதடு' 'தொடாத வாலிபம்' 'எப்போதும் இருப்பவர்கள்' ஆகிய இனிக்கும் இலக்கியங்களை சுரதா தமிழ் வையத்திற்கு வழங்கி யிருக்கிருர்—வளருகின்ற மறுமலர்ச்சியாளர்கள் 'ஒப்பற்ற உவமைக் கவிஞரை இனியாவது புரிந்து கொள்ள வேண்டும், இருட்டு சிந்தைக்கும், முட்டாள் நினைப்புகளுக்கும் பாரதியை பலியாக்கியதேபோதும்!

கவிஞர் வாழ—அவரது தேன் நிகர் கவிதைகள் வாழ—நல்ல தமிழின் புகழ் எங்கும் ஒலிக்க பண்பட்ட சமுதாயத்தை—பாழ்நிலைக்கு கொள்ளை போகாத மக்கள் பெருக்கத்தை எதிர்காலத்திற்காவது உருவாக்கி அளிப்போம்.

S.P.T.

SANKARAN PROGRESSIVE TUTORIALS · TIRUCHI

SANKARAN PROGRESSIVE TUTORIALS

★ COLLEGE & HIGH SCHOOL ★

KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD

TEPPAKULAM P.O. TIRUCHIRAPALLI.

RE-OPENS. 10TH JUNE 1955.

S. S. L. C., INTER, B.A., ETC.

(All Parts & Groups)

The Greatest Living Poet

BARATHI DASAN

will teach you Tamil!

Mrs. JUDITH LOUIS B.A. (Hons) Vice Principal

N. J. DEVADAS, M.A. Principal

டேனிஷ் பாதிரிகள் கல்வித் தொண்டின் சிறப்பு

ஆரம்பக்கல்வி—தொடர்ச்சி

தொண்டாற்றுவதற்கு கிழக்கிந்தியக் கம்பெனியாரும் சம்மதம் தெரிவித்தனர். 1717-ல் சென்னையில் போர்ச்சுகீசியர்களுக்காக ஒரு பள்ளிக்கூடத்தையும், தமிழர்களுக்காக ஒரு பள்ளியையும் நிறுவினர். 1719-ல் திராவிட நாட்டை அடைந்த டேனிஷ் பாதிரியான ஷுல்ட்ஸ் (முன்னர் கூறப்பட்டுள்ளது) என்பார் சென்னையில் தங்கி இப்பள்ளிக்கூடங்களை விரிவு படுத்தியதோடு இரண்டு அதிகப்படியான பள்ளிக்கூடங்களையும் ஒரு சர்ச்சையும் நிறுவிச் சென்றார்.

18-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வி முறையை ஒழுங்குபடுத்தியவர் முன்னர் கூறப்பட்ட ஸ்வார்ட்ஸ் (Schwartze) என்னும் டேனிஷ் பாதிரியாரேயாகும். இவர் ஒரு ஜெர்மானியர். 1749-ல் தரங்கையில் வந்திறங்கினர். 1798-ல் தாம் இறக்கும் வரையில் திராவிடர்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்குமே தன் வாழ்நாளை செலவிட்டார். இவர் திருச்சியிலும் தஞ்சையிலும் பள்ளிக்கூடங்கள் நிறுவிய வரலாறு சென்ற வாரங்களில் கூறப்பட்டுள்ளது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இவர் திராவிட நாட்டு அரசர்களையும் ஜமீன்தார்களையும் அணுகி மேல் நாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றும் படியும், மேல்நாட்டு நாகரீகம் விஞ்ஞானம் ஆகியவைகளை இந்நாட்டில் பரவச் செய்வதற்குத் துணை புரியும்படியும் தூண்டுதல் செய்தார். சிற்றரசர்களும் ஜமீன்தார்களும் இவருடைய நல்வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தனர். தஞ்சை இராமனுதபுரம், சிவகங்கைசிற்றரசர்கள் இவரது யோசனைகளை ஏற்றுக்கொண்டு 1785-ல் ஆங்கில மொழி போதிக்கும் பள்ளிக்கூடங்களை சிவகங்கை, இராமனுதபுரம், தஞ்சை ஆகிய நகரங்களிலும் 1790-ல் கும்பகோணத்திலும் நிறுவினர். இவைகளில் தஞ்சை, கும்பகோணம்பள்ளிகள்மட்டுமேதொடர்ந்து வளர்ச்சியடைந்துவந்தன. மற்ற இரண்டும் 1790-ல் நின்று விட்டன. இப்பள்ளிக்கூடங்கள் செல்வ வசதி பெற்றவர்கட்கும் அரச குடும்பத்தினருக்கும் அரசாங்கஉத்தியோகம் வகிப்பதற்கு அவாக்கொண்டவர்கட்கும் பயன்படுத்தப்பட்டன. இத்துடன் கீழ்த்தர மக்களின் நலனிற்காக தாய்மொழிப் பள்ளிகள் நிறுவும்படியும் யோசனை கூறினர். தானே முயன்று இரு தாய்மொழிப் பள்ளிக்கூடங்களை துவக்கி வைத்தார். ஸ்வார்ட்ஸ் திட்டப்படி போர்ச்சுகீசியர்களுக்கு போர்ச்சுகீசிய மொழியிலும், ஆங்கிலேயர்கட்கு ஆங்கில மொழியிலும், திராவிடர்களுக்கு திராவிட மொழிகளிலும் கல்வி போதிப்பது என்ற முறை கையாளப்பட்டு வந்தது.

தஞ்சை மகாராஜாவின் அரண்மனையில் சென்னை சர்க்காரின் பிரதிநிதியாக இருந்த ஜான் சல்லிவன் என்பார் இந்த முறையில் மாற்றங்காண விரும்பினர். ஆங்கில மொழியானது நாட்டு மக்களிடையே பரவினல் வாணிப விவகாரங்களை எளிதாகவும் துரிதமாகவும் தீர்த்துக் கொள்வதற்கு ஏதுவாகும் என நினைத்தார். ஆங்கில வியாபாரிகள் நாட்டு வியாபாரிகள் ஆகியோரிடையே தரகு புரிந்து வந்த துபாஷிகளால் பல வித கஷ்டங்கள் ஏற்பட்டு வந்தன. இவைகளை தடுப்பதற்கு இருசாராரும் அறிந்த ஒரு பொதுமொழி அவசியம் என உணர்ந்தார் சல்லிவன். உள்நாட்டு வியாபாரிகளும் மக்களும் வியாபாரம் காரணமாகவும், உத்தியோகம் காரணமாகவும் சிறுக சிறுக ஆங்கில மொழியைப் பயின்று வந்த உண்மையும் சல்லிவன் தெரிந்திருந்தார். ஆகவே உள்நாட்டவர்கள் ஆங்கிலம் கற்று வியாபாரத்திற்கும் உத்தியோகத்திற்கும் அருகதையுடையவர்களாக வரவேண்டிய அவசியத்தை உணர்ந்து ஆங்கில மொழியை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போதனு மொழியாக ஏற்படுத்தும்படி ஸ்வார்ட்ஸ் அவர்களுக்குக் கூறினர்.

இம்மாற்றத் திட்டத்தை ஸ்வார்ட்ஸும் ஒருவாறாக ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இக்காரியத்திற்கு ஆங்கிலக் கம்பெனியாரும் பண உதவி புரிந்து ஊக்கமளித்தனர். இதிலிருந்து நாட்டில் ஆங்கிலக் கல்விக் கூடங்கள் ஏற்படத் துவங்கின. நாளாவட்டத்தில் ஆங்கில மொழிப்பள்ளிகள் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்து வந்தன. இவ்வளர்ச்சி கணிசமான அளவிற்கு வளரவில்லையென்றாலும், அந்தக் காலத்திலேயே ஆங்கிலக் கல்விக்கு அடிப்படையிடப்பட்டு முறையான கல்வி போதிக்கப்பட துவங்கப்பட்டு விட்டது என்பதை தெரிவித்து நிற்கிறது. இப்பள்ளிகளில் கணிதம், ஆங்கிலம், கிருத்துவ மத போதனைகள் பாடதிட்டங்களாக இருந்தன. இவைகளுடன் தமிழும், அரபு மொழியும் பாடங்களாக இருந்து வந்தன என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. இப்பள்ளிகள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாரின் மேற்பார்வையில் நடைபெற்றன. கம்பெனியாரின் பொருளுதவியும் கிடைக்கப் பெற்று வரவு செலவுகள் கம்பெனியாரின் கண்காணிப்பில் நடைபெற்றுவந்தன, இப்படியாக சுமார் 200 ஆண்டுகட்கு முன்னரே பிரத்யேக கல்வி ஸ்தாபனங்கள் காணப்படுவதற்கு

பதினேழாவது நூற்றாண்டின் கல்வி வரலாறு

ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டு சர்க்காரின் மேற்பார்வையும் இருந்து வரும்படியான ஒரு ஒழுங்கு முறை அமுலுக்கு வந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாதிரியான பள்ளிகளைத் தவிர புதுமாதிரியான சில பள்ளிகளும் நிறுவப்பட்டன. செயின்ட் ஜியார்ஜ் கோட்டை கவர்னராயிருந்த சர் ஆர்ச்சிபால்ட் காம்பெல் அவர்களின் மனைவி லேடி காம்பெல் (Lady Campbel) "அனாதை பெண்கள் விடுதி" (Female Orphan Asylum) ஒன்றை 1784ல் அரிதின் முயன்று நிறுவினர். ஆர்க்காடு நவாப் அவர்கள் இவ்வனாதைப் பள்ளி நடப்பதற்கான இடத்தை 8000 பொன் விலைக்கு வாங்கி இனமாக வழங்கினர். பெரும் வியாபாரிகளும் தனவான்களும் பொருளுதவி புரிந்தனர். சென்னை செயின்ட் ஜியார்ஜ கோட்டை ஆங்கில ஆட்சியினரும் ஒரு பகுதி செலவை ஏற்றனர். இத்துடன் 1787-ல் ஆண்கள் அனாதைப் பள்ளி ஒன்றும் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பள்ளியில் டாக்டர் ஆண்ட்ரூ பெல் (Dr. Andrew Bell) என்பார் ஆசிரியராக இருந்து திறம்பட நடத்தி வந்தார். இப்பள்ளியில் சட்டாம்பிள்ளை முறையை மேற்கொண்டு கல்வி புகட்டி வந்தவரும், இத் தமிழ் நாட்டுக் கல்வி முறையை இங்கிலாந்திலும் புகுத்தி உலகப் புகழ் பெற்றவரும் இவரேயாகும். இக்கல்விமுறை பிரபலமடைந்ததைப்பற்றி ரெவரண்ட் பென்னி கூறுவது இவ்விடம் குறிக்க வேண்டியதாகும்.

'ஆண்கள் அனாதைப்பள்ளியில் பெல் அவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்த கல்விப் பயிற்சி முறையானது அவர் எழுதியுள்ள 'கல்வியில் ஒரு பரீட்சை' என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது இப்பயிற்சி முறையை அவர் இங்கிலாந்திலிருந்தோ அன்றி ஸ்காட்லாந்திலிருந்தோ உடன் கொண்டு வரவில்லை அல்லது அமெரிக்காவில் அவர் தங்கியிருந்தபோது கற்றுக் கொள்ளப்பட்டதுமல்ல. அவர் கடைப்பிடித்துவந்த கல்விப் பயிற்சி முறையானது கர்நாடகத்தில் தொன்று தொட்டு நடந்து வந்த உயர்ந்த கல்விப் பயிற்சி முறையேயன்றி வேறு எவ்வித அந்நிய நாட்டு முறையுமன்று. பெல் அவர்கள் தென்னிந்தியாவை நன்கு சுற்றிப் பார்த்தவர். தரங்கையில் தங்கி இருந்த டேனிஷ் பாதிரிகளை நன்கு தெரிந்திருந்தார். தஞ்சை, திருச்சி, போன்ற இடங்களில் நடைபெற்று வந்த தமிழ் கல்விப் பயிற்சி முறைகளை பாதிரிமார்களான போல், (Pohle) ஸ்வார்ட்ஸ் (Schwartze) என்பார்களின் உதவி கொண்டு நன்கு தெரிந்து கொண்டார். இப்படி இவர் கண்டறிந்த தமிழ்கல்விப் பயிற்சிமுறையானது (அதாவது சட்டாம்பிள்ளைகள் பள்ளிக்கூட நிர்வாகக் காரியங்களில் ஆசிரியர்களுக்கு உதவியாயிருந்து வருவதும் தம்மையொத்த மாணவர்கட்கு கல்வி புகட்டுவதில் ஆசிரியர்கட்கு உதவியாயிருப்பதும்) அவருக்கு ஒரு புதிய முறையாகவும் நல்ல முறையாகவும்பட்டது. சென்னை ஆண்கள் அனாதைப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தபோது அப்பள்ளியில் இந்த சட்டாம்பிள்ளை முறையைப் புகுத்தி வெற்றி கண்டார். இம்முறை ஆங்கிலேயர்களால் வெகுவாகப் புகழப்பட்டு ஆதரிக்கப்பட்டது. இங்கிலாந்து தேசத்திலும் இம்முறை புகுத்தப்பட்டு ஆதரிக்கப்பட்டது. இதனை ஆங்கிலேயர்கள் பெல் முறை (Bell System) என்றும் சென்னை முறை (Madras System) என்றும் சட்டாம்பிள்ளை முறை (Monitorial System) என்றும் புகழ்ந்து பேசினர்.

ஆண்ட்ரூ பெல் அவர்கட்குப் பின்னர் ஆசிரியராக அமர்ந்த ஜேம்ஸ் கார்டினர் (James Cordinar) என்பார் இந்தத் தமிழ் முறையை வெகுவாகப் புகழ்ந்து அம்முறையை வளர்ப்பாராயினர். 'இம்முறை மாணவர்களிடையே சுறுசுறுப்பையும் கவன சக்தியையும் ஏற்படுத்துகிறது. பிரியரூஸுக்கு (Briareus) எப்படி அவனது நூறு கைகள் உதவுகிறதோ அப்படியே இக்கல்விமுறை ஆசிரியருக்கு உதவுகிறது. ஆர்கசுக்கு (Argus) எப்படி நூறு கண்கள் பயன் படுகிறதோ அதே போன்று இம்முறை ஆசிரியருக்குப் பயன்படுகினறது. மர்குரிக்கு (Mercury) எப்படி பல இறகைகள் இருந்து உதவுகின்றனவோ அதே போன்று இக்கல்விமுறை ஆசிரியருக்கு உதவியாக உள்ளது'

தமிழ் நாட்டுக் கல்விப் பயிற்சிமுறையான மானிட்டர் — முறையைப்பற்றி திருவாளர்கள் சையத் நூருல்லா அவர்களும் ஜெ. பி நாயக் அவர்களும் தமது 'இந்தியக் கல்வி சரித்திரம்' என்னும் வரலாற்று நூலில் கூறுவதும் குறிப்பிட வேண்டியதாகும்.

'சரித்திர வரலாற்று ஆசிரியர்கள் இந்தியக் கல்வி வளர்ச்சிக்கு இங்கிலாந்து அளித்துள்ள நன்மைகளைப் பற்றி மட்டுமே வானளாவப் புகழ்கின்றனர். இங்கிலாந்து ஏழைச் சிறுவர்களிடையே கல்வி அறிவு பரப்புவதற்கான பெரும் உதவியை இந்தியக்கல்வி முறை அளித்த உண்மையைப் பற்றி ஏனோ இவ்வாசிரியர்கள் வாய் திறப்பதில்லை. சென்னை குருமாராக இருந்த டாக்டர் பெல் அவர்கள்தான் இந்தியக் கல்வி முறையான இந்த மானிடர் முறையின் மதிப்பை முதன் முதல் உணர்ந்தவராகும். இம்முறையினல் ஏற்படும் பயன்களை நன்கு உணர்ந்தார் அவர். ஆகவே இம்முறையை இங்கிலாந்திலும் கடைபிடிக்கும்படி யோசனை கூறினர். இம்முறையை விளக்கி 1798ல் ஒரு புத்தகமும் வெளியிட்டார். ஆங்கில ஆசிரியர்களின் கவனத்தை இம்முறை பெரிதும் கவர்ந்து விட்டது, அதிக பொருட் செலவுமின்றி, நீண்ட கால விரயமுமின்றி துவக்கக் கல்வியை எளிதில் புகட்டக் கூடிய இக்கல்வி முறையை ஆங்கிலேயர்கள் வரவேற்றதிலும் புகழ்ந்ததிலும் வியப்பென்ன இருக்க முடியும்! இதன் காரணமாக இங்கிலாந்து முழுவதும் இம்முறை கையாளப்பட்டு வெற்றி காணப்பட்டது. 1801-க்கும் 1845-க்கும் இடையே உள்ள காலத்தில் இந்த சென்னை முறையின் உதவியைக் கொண்டு இங்கிலாந்து சிறுவர்கட்கு துரிதமாகவும், வியாபகமாகவும், சொற்பச் செலவிலும் துவக்கக் கல்வி புகட்டப்பட்டது.

மேற்கூறிய ஆண்கள் அனாதைப் பள்ளியில் ஒரு யந்திரத் தொழிற்சாலையை இணைத்து யந்திரத் தொழிற்களில் மாணவர்கட்கு பயிற்சிக் கொடுக்க வேண்டுமென்பது இதன் தலைமை ஆசிரியராக இருந்த ஆர். எச். கேர் என்பாரது ஆவலாகும். அவரது யோசனையை சர்க்கார் ஏற்காதுபோகவே தானே தன் சொந்த செலவில் அச்சு யந்திரம் ஒன்றை நிறுவினர். யந்திர அச்சுத் தொழிலை பையன்களுக்கு கற்றுத் தந்து பிற்கால பிழைப்பிற்கு வழி முறைகளை ஏற்படுத்தினர். இவர் நிறுவிய அச்சுக்கூடம் பிற்காலத்தில் லாரன்ஸ் அசைலம் பிரிண்டிங் பிரஸ் (Lawrence Asylum Printing Press) எனப் புகழ்பெற்று விளங்கியது. —தொடரும்

—திராவிடப்பித்தன்

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

வரலாற்றுச் சித்திரம்

விஞ்ஞானத் தந்தை அரிஸ்டாட்டல்

கௌதமன்

கி. மு. 384—322

மேகங்கள் குமுறுவதற்கும், வாடைக்காற்று வீசுவதற்கும், நெடுந்தரை சுடுவதற்கும், நீள் விசும்பில் வண்ண ஜாலங்கள் தோன்றி மறைவதற்கும், பூமி பிளப்பதற்கும், எரிமலை வெடித்தெழுவதற்கும், ஏதாவது ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டுமென்று கண்டறிந்தவன் விஞ்ஞானி!

வானம் பெய்வதும், கழனி விளைவதும், மனித இனத்திற்குப் புரியாத புதிராக இருந்தது வெகு நாட்கள் வரையில்! இயற்கையைப் பற்றிய அச்சம், ஆச்சரியமாக மாற அவர்களுக்கு, வெகு நாட்கள் பிடித்தது!! பூமி உருண்டை; தெரியாது அவர்களுக்கு! பூமி சுற்றும்; புரியாது அவர்களுக்கு! தாவரங்கள் வளரும் விதம் கேள்விப்பட்டதில்லையவர்கள்! கொடி முல்லையின் மணம் சுனை நீரின் இனிமை, கனி மரத்தின் பெருமை, தென்றலின் தூய்மை, புயலின் கொடுமை, இவை யாவுமே அவர்களால் உணர முடிந்ததே தவிர ஏனிவை இப்படி என்று தெரிய முடியாத காலமும் ஒன்றிருந்தது!! ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன போன்ற விலங்கினங்களின் வளரும் விதமும், வாழும் விதமும் அவர்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றினவே தவிர, 'ஏன்' எப்படி?' என்ற ஆராய்ச்சி வினாக்கள் அவர்கள் உள்ளத்தில் எழவேயில்லை வெகுநாட்கள் வரையில்!!

வானவில்லைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவரின் மத்தியிலே, 'ஏனிது இப்படி?' என்று கேட்கத் துணிந்தவனும் இருந்த காரணத்தினாலேதான், ஆராய்ச்சி பிறக்கலாயிற்று!

இனிக்கும் பழத் தோட்டம் எதனால் வளருகிறது? எப்படிக் கனிச்சுளை தருகிறது? அப்படித் தந்த சுளையில், ஏன் இனிமை இருக்கிறது என்று எவனோ ஒரு சுறுசுறுப்பாளன் கேட்ட பிறகுதான் தாவர ஆராய்ச்சியே ஏற்படலாயிற்று.

முட்டையிடும் கோழி ஏன் அடைகாத்துக் கிடக்கிறது என்று கூர்ந்து கவனித்த பொறுமையாளனும் இருந்த காரணத்தினாலேதான் முட்டை அடைகாக்கப்படுவதினால், குஞ்சு வெளியாகி, 'புது உயிர்' கிளம்புகிறது என்ற உண்மையே வெளிவரலாயிற்று.

இப்படி ஒவ்வொரு துறையிலே தோன்றிய புது உள்ளத்தினரால்தான், உலகம் பல உண்மைகளைக் கண்டெடுத்தது! இத்தகைய மறுமலர்ச்சியாளர்களின் உள்ளத்தில் முதன்முதல், எழுந்தஅச்சம்தான் நாளாவட்டத்தில் ஆச்சர்யமாக மாறி; பிறகு, கேள்விக் குறியாக மாறி; இறுதியில் ஆராய்ச்சி தந்த விஞ்ஞானமாகவும் ஆகி யிருக்கிறது!

ஆக, ஆராய்ச்சி தந்த அரும்பொருள்தான் விஞ்ஞானம்! அதனை ஆராய்ச்சி செய்த அருந்திறல்தான் விஞ்ஞானி! விஞ்ஞானி! அறிவுச் சாதனம் பல பெற்றவன்! உருண்டோடும் நாட்களை 'மோன' நிலை காணப் பயன்படுத்துபவன் அல்லன், மாயைப் பேச்சும், மனமயக்கப் பூச்சும் அவனிடம் கிடையாது. அறிவு பேசும்—ஆராய்ச்சி நெளியும் அவன் செயலில்! விறுவிறுப்புக்காரன்! புது எண்ண அமைப்புக்காரன்! அவனால் உலகம் உய்வடைந்தது; அடைகிறது; இனியும் அடையும்!

இத்தகைய தெளிவு மதியும்—தியாக உணர்வும் கொண்டவர்களின் முழுமுதல் தந்தைதான் **அரிஸ்டாட்டல்!** இயற்கை யாராய்ச்சிக்கு அவன்தான் ஆதிகர்த்தா.

அரிஸ்டாட்டல், கிரேக்க நாடு தந்த முப்பெரும் தத்துவ ஞானிகளுல் மூன்றாமவன்! சீடனுக்குச் சீடன்! ஏதென்ஸின் கடற்கரைப் பகுதியிலே, 'லைசியம்' என்ற பல்கலைக்கழகம் சமைத்தான் **பிளேட்டோ!** பிளேட்டோ (கி. மு. 427—347) சாக்ரடீசின் பிரதம சீடன்! **சாக்ரடீஸ்** (கி.மு. 470-399) பகுத்தறிவுத் தந்தை! **கிரேக்கம்** அறிவுத்துறையில் செறிவுபெற்று விளங்க, நஞ்சுண்டு மாண்ட மகா புனித மேதை!

சாக்ரடீஸின் மரணத்திற்குப் பிறகு பல இன்னல்களுக்காளாகி தனது இறுதிக் காலத்தில் ஒரு **பல்கலைக் கழகம்** (Academy) சமைத்தான் பிளேட்டோ! அந்த அறிவாராய்ச்சிக் கழகத்திற்கு அவனே தலைவனாகவும் அமர்ந்து, தனது அருமை ஆசிரியனின், சொல்லோவியங்களை ஒருங்கு திரட்டி வெளியிட்டதோடு தனது சமுதாயக் கோட்பாடுகளையும், அரசியல் சட்ட திட்டங்களையும் தெளிவு படுத்திக் கொண்டிருந்தான். அந்த நேரத்திலே பிளேட்டோவிற்குக் கிடைத்த பலநூறு மாணாக்கர்களில் மிகச் சிறந்தவனாகக் கருதப்பட்டு பிரதம சீடனாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டவன்தான் அரிஸ்டாட்டல்!

பிளேட்டோவின் கலைக் கழகத்திலே அறிவு கற்கவும், ஆராய்ச்சி பயிலவும், மாஸிடோனியப் பகுதிகளிலேயிருந்து கிளம்பி வந்தான் அரிஸ்டாட்டல்! அரிஸ்டாட்டலின் தந்தை மாஸிடோனிய மன்னன் இரண்டாம்பிலிப் (PhilipII) என்பானின் அரண்மனை வைத்தியன். கி, மு. 384-ல் ஸ்டேஜிரா (Stagira) என்ற இடத்தில் பிறந்தவன்தான் அரிஸ்டாட்டல்! சிறு பருவ முதலே தந்தையின் வைத்திய சாலையிலே பழக்குவிக்கப்பட்டான் அரிஸ்டாட்டல். இந்தச் சூழ்நிலையாலேதான் விஞ்ஞானம் பயின்று ஆராய்கின்ற ஒரு வாய்ப்பும் எண்ணமும் ஏற்பட்டது அரிஸ்டாடலுக்கு. எனவே தனது பதினெட்டாம் வயது வரையிலே தந்தையைப் பயின்றான் அரிஸ்டாட்டல். மருந்துக்கும் மருத்துவத்திற்கும் அந்த நேரம் வரை போற்றிப் புகழப்பட்ட முறை—**ஹிப்போகிரட்ஸ்** (Hippocrates 460 B. C. என்பான் வகுத்த வைத்திய முறைதான்! அதைத்தான் நன்கு பயின்றான் அரிஸ்டாட்டல்!

தனது 18-ம் வயதிற்கு மேற்பட்டுத்தான் உலக விவகாரங்களில் தலையிட கிளம்பி வந்தான் அரிஸ்டாட்டல். கி. மு. 367-ல் ஏதென்ஸ் நகரம் போந்து அங்கே 'லைசியத்தின்' மாணவனாகத் தன்னையவன் பதிவு செய்து கொண்டதும், தனது 18-ம் வயதில்தான். பதினெட்டிலிருந்து முப்பத்தெட்டாவது வயது வரையில் சுமார் 20 ஆண்டுகள் வரை பிளேட்டோவைப் பயின்றதோடு நிம்மதியடையாமல் கணிதம், விஞ்ஞானம், வானசாஸ்திரம் போன்ற பல்வேறு பொருள்களிலும் மிகத் தேர்ச்சி பெற்றவனாகி விட்டான் அரிஸ்டாட்டல்! சாதாரண மாணவனாக வந்தவன் பிரதம சீடனாக மாறி பிளேட்டோவின் நண்பனாகவும் பிற்காலத்தில் அவனின் வாரிசாகவும் ஆகுமளவுக்கு அங்கே வளர்ச்சியடைந்தவனாகி விட்டான் அரிஸ்டாட்டல்! அங்ஙனம் அவனை வளர்த்தது அவனின் அந்த 20 ஆண்டுகளின் தளராத சேவைதான் என்றால் மிகையல்ல அது!

எனவே இங்ஙனம் கற்றுத் தேர்ந்து வெளிவந்த அரிஸ்டாட்டல் இப்போது புகழுடன் கிரேக்க உலகிலே வரவேற்கப் பட்டான்! கிரேக்கம் பூராவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து தனக்கும் தனதாராய்ச்சிக்கும் வேண்டிய பல்வேறு சாதனங்களையும் தயாரித்தான் அரிஸ்டாட்டல்.

ஐம்பது வயதைத் தாண்டி விட்ட அரிஸ்டாட்டலுக்கு இந்த நேரத்திலேதான் அதிகமான வரவேற்பு இருந்தது. எவரிடத்தும் இவனுக்குள்ள மதிப்பு அதிகரித்தது! தங்களின் ஆசிரியர்களின் போக்கிற்கே முழுக்க முழுக்க மாறாக, இயற்கையை ஆராய்ந்து தெளிவதில் கவனங் கொண்டு அரிஸ்டாட்டல் உலவிவந்தது அனைவருக்கும், வியப்பைத்தான் தந்தது!

சாக்ரடீஸ் பகுத்தறிவு பேசினான்! பிளேட்டோவோ, சமுதாயம் வகுத்தான்; அரசியலுக்குப் பாதை சமைத்து, சட்டம் வகுத்தான்! ஆனால், அரிஸ்டாட்டலோ இவ்விரண்டிற்கும் மாறான, ஆனால் மக்கட் சமுதாயத்திற்கு மிக முக்கியமாகத் தேவைப்பட்ட விஞ்ஞானத்தைக் கண்டான்! இந்த முறைதான் அந்த நேரத்திய மக்களை வியக்க வைத்தது! லைசியத்திலிருக்கும்போதே இவன் புகழ் கிரேக்க மண்டலத்திலே பரவிக் கொண்டிருந்தது. பல நாட்டு மணிமுடிகள் இவனைபெற முயற்சித்தன! ஆனால், மாஸிடோனியா மட்டுந்தான் இவனை உரிமையோடு அணைத்துக் கொண்டது! அதன் முடிமன்னன் **பிலிப்** (Philip கி.மு. 359—336) தனது அருமை மகனும், பிற்கால உலக வெற்றி வீரனுமான **அலெக்சாண்டருக்கு** (கி, மு. 356—323) கல்வி போதிக்க அரிஸ்டாட்டலை அமர்த்தி விட்டான்.

அலக்ஸாண்டரோ, தான், போரிடக் கிளம்பி வரும் வரையில், அரிஸ்டாட்டலிடம்தான், சகல அறிவையும் தேடிப் பெற்றான். அரிஸ்டாட்டலின் சேர்க்கையால் அலெக்சாண்டர் வீரனானது மட்டுமல்ல; விவேகியாகவும், பல்கலையும் கற்றுணர்ந்தவனாகவுமானான் அந்த நன்றிப் பெருக்கால் தான் அவனை ஆதரிக்கவும் செய்தான் அலெக்சாண்டர்! அரிஸ்டாட்டலின் பிற்கால ஆராய்ச்சிக்குத் தன் பொக்கிஷத்திலேயிருந்து, ஒரு நிலையான நன்கொடையும் அளிக்கச் செய்தான் அலெக்சாண்டர்!

(அடுத்த வாரம் முடியும்)

சிட்டுக் குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

இந்த லேகியம் புருஷர்களுடைய நபும்ஸகம், அல்லது லௌகீக சுகத்தை அனுபவிக்க சக்தி இழந்து போதல் என்னும் துக்கரமான கொடிய வியாதியைப் போக்கி சுகபோகம் அனுபவிக்கச் செய்யும். மேலும் காம சம்பந்தமான பேச்சுகளை பேசும் பொழுதும், சொர்ப்பனத்தில் வீரியம் இழப்பதும் போன்றவற்றைத் தடுத்து பலமுள்ளவர்களாகச் செய்வது இச்சிட்டுக் குருவின் சத்தின் தாது புஷ்டி லேகியமாகும். இன்னும் விபரீத சேர்க்கையால் ஏற்படும் விபாதிகளான வெள்ளை, மூத்திர எரிச்சல், அடிக்கடி மூத்திரம் போதல், நீர் சுருக்கு, நீரடைப்பு முதலியவைகளை மாற்றி சுகமடைய செய்வதுடன் ஸ்திரீ புருஷர்கள் இழந்துபோன தேகவலுவைப் பெற்று அவரவர் அவர்களது தன்மையை அடைந்து மகிழ்ச்சியடையும்படி செய்வது. இச்சிட்டுக்குருவி சத்தின் தாது புஷ்டி லேகியத்தை 48-நாள் சாப்பிடவேண்டும், இதை ஆண் பெண் அனைவரும் சாப்பிடலாம்.

இத்தாது புஷ்டி லேகியத்தை பலவித பஸ்பங்களாலும், பலவித மூலிகைகளாலும் ஒன்பது வகை வித்துக்களாலும், பலவகை வேர்களுடன் கடைச் சரக்குகளும் சேர்ந்து இத்துடன் நெய், பால், தேன் கலந்து பல பிஸ்தாக்களும் ஒன்று கலந்து அதற்குக் தகுந்த முறையில் பதப்படுத்தி மணம் குணம் பொருந்திய உருசியுடன் கூடியது. இதனை அனைவரும் உண்ணலாம். பத்தியமில்லை; சுகமடையலாம். இதனை தொடர்ந்து ஒவ்வொருவம் அருந்தினால் ஆயுள் உள்ளளவும் மற்ற மருந்து அருந்த வேண்டியதில்லை. சிட்டுக் குருவி சத்தின் தாதுபுஷ்டி லேகியத்தில் தாம்பிர பஸ்பம்; அப்ரேக் செந்தூரம், வங்கபஸ்பம் அயச் செந்தூரம், காந்தச் செந்தூரம், கல்நார் பஸ்பம் முதலியவைகளை முறைப்படி செய்து இவை மிகவும் சிறந்த ஔஷதம்.

ஒரு மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 2-க்கு ரூ. 6—0—0

ஒரு மண்டலம் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனாம்.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

மதராஸ்—12

9. சுரதா

●

கங்குழிந்த கதிர்விழிச் சிரிப்பை
வளி வானத்தில் மாற்றி; நெஞ்சைப்
பனிப்படுத்தித்தன் பாதச் சிலம்பை
இசையில் இட்டு; ஏடுகுளிர்ந்த
கன்னத்தரப்பில் சித்திரக் குழிகள்
கடைந்து; இளமைகுழைத்து; மரகத
ஒய்யார சப்பர மெய்த்தோள் விழுங்கப்
போதல்போல, பூங்கொடி அசைந்து
நடந்தாள், அழகு நடந்தது!

இந்த அழகிய கவிதை வரிகளைத் தந்தவர் சுரதா. தமிழின் புதிய செல்வம். 'காலக் காவேரியின் சுழிப்பு எல்லைகளைப் பந்தமாக வைத்துச் சுழற்றி, நீரும் நெருப்பும் கொள்ளாத கவிதை ஏட்டிலே பூட்டி' புதுமை இலக்கியத்தின் தேயா நிலவாக—அழகுணர்ச்சியின் சுவைப்பிழம்பாக பட்டயம் பெற்றுவிட்ட கவிஞர். பனிமலையின் குளுமையும், நெருப்பின் தகிப்பும் இவரது கவிதையிலே தமிழ் முழக்குகின்றன. புதுப்புது உவமைகள் சுரதாவின் பாராட்டுதற்குரிய பாணி. உணர்ச்சி உருகியோடும் தலைப்புகளில் கவிதைக் கனவுகளை வளம் கொழிக்க வடித்தெடுப்பதில்—வார்த்தைகளுக்கு உயிர் பெய்வதில் — சுரதா தமிழுக்குப் புதியவர்!

செக்குமாட்டு நினைப்போடு இலக்கண வரம்பில் எழுகடலையும் புகுத்தாது புதிய அமைப்பில் சின்னஞ்சிறு கவிதைகளை சுவை ததும்ப படைத்ததில் சுரதா தமிழுக்கு புதியவர்!

'வசன கவிதை கவிதை வசனம்' என்றெல்லாம் குழம்பிடாமல் இதுவே கவிதை. அகத்திலும் புறத்திலும் காணோமே இந்த அருமையை! என கற்றறிந்தோர் புகழும், சாதனையைப் படைத்ததில் சுரதா தமிழுக்குப் புதியவர்!

ஆம், சுரதா புதியவர்; அவர் சாதனை புதியது; அவரது கவிதைகளே புதியன. ஆகவேதான் அவர் நல்ல மனத்தினரால் போற்றப்படுகிறார். மலர்கின்ற தமிழ் வையத்திலே சுரதாவின் கவிதைகள் ஆர்வத்தோடு வாழ்த்தப்படுகின்றன. புரிந்துகொண்டோருக்கு அவர் செல்வம். புதிய விழிப்பிற்கான திருப்பள்ளி எழுச்சி சுரதாவின் கவிதைகள்.

திராவிடர் இயக்கம் தனக்கென சில கவிஞர்களைப் பெற்றிருக்கிறது. கண்ணதாசன், வாணிதாசன், முடியரசன் போன்ற இளம்பரம்பரையினரிலே—புதிய பாணிக்காக போற்றுதலைப் பெற்றவர் சுரதா. இலக்கிய உலகே வாயடைத்துப் போகுமளவிற்கு உவமைச் செல்வத்தை வாரி வழங்குபவர். அவரது வார்புகள் அனைத்தும் வைரமணிக் கோர்வை! சொற்களின் அழுத்தம் தரும் சுவையும், இனிமையும் நெஞ்சங்களை உணர்ச்சியிலே குளிப்பாட்டும்! தமிழ் இத்தனை காந்தக் கவர்ச்சியோடு எவரிடமும் பொலிவு பெற்றதில்லை. பாருங்கள் அந்த எழிலை...

முல்லையிலே சிரிக்கின்றாள்! வானமென்னும்
முகம்பார்க்கும் கண்ணாடிமேனி எங்கும்
செல்திறத்து பட்டாடைபோர்த்து நின்றாள்!
நீலமலர் இதழ்வடிவில் அசைந்து, பச்சைப்
புல்இனத்தில் ஒளிகின்றாள்! அருவியாகிப்
புனல்வழித்து சிந்துகின்றாள்! அந்தரத்து
வில்வளைவில் கூத்திட்டு கருப்புத்தோளின்
மணிவரியில் முத்துருவம் நடைகின்றாள்!...

சிரிப்பின் நிழல் பற்றிய அழகோவியம் இது. சின்னஞ்சிறு சொற்களிலே புயலை அடக்கிக் காட்டும் ஆற்றல் சுரதாவின் பண்பு. பெரும்பான்மையான கவிதைகள் இலக்கண எல்லைகளிலிருந்து நழுவிய படைப்புகளல்ல. கவிதைச் சுவையோடு—ஓத்திசைப்பு மெருகிட, பண்பான பாடல்களை இவர் எழுதாமலில்லை. உணர்ச்சி கரைபுரளும் வேளையில் கட்டுத் தறியில் சிக்காத சொற்கள் சிலபோது அதிகப்படியாக விழுந்து விடுகின்றன. எனினும் சுவையின் அருமைபெரிது. சுரதாவின் பெருமையே இந்த 'கட்டுத்தறியில் சிக்காத பண்புதான்!'

●

பொதிகை மலைச் சந்தனமே!
பூவுலகில் எல்லோரும்
மதிக்கும் தமிழே! என்னை
மயக்குகின்ற 'போதையே'!
ஓடி நிலம் கழுவும்
ஓடையிலே பூத்திருக்கும்
வாடாமலரே, அதன்
வாசனையே, எச்சில்முத்தம்
ஓசையுடன் கொடுத்து
உதவவாய்' என்றுஎன்னை
ஆசையுடன் கேட்க ஒரு
அத்தான் கிடைப்பதெந்நாள்!''

அங்காடிக்காரி பெற்ற அருமை மகள் கண்ணம்மா தித்திக்கும் நினைப்பிலே நெஞ்சம் இழந்திருந்தாள்!



அவ்வேளை கொட்டுகின்ற தேளின் கொடுக்கு மீசை கொண்ட ஆருடம் பார்ப்போன் அங்குவர கண்ணம்மா கைகாட்டினாள் அவனிடம். அவனோ காவடிப் புருவம் பார்த்தான்! கன்னத்தில் மின்னல் பார்த்தான்! சேவலின் தாடி வர்ணம் சிவப்பாகும் உதட்டில் பார்த்தானும்! இதோ அந்த அழகோவியம்—உணர்ச்சிதரும் பாடல் வரிகள்:

வான் வந்து கண்ணுக்குள்ளே
வளருதே! துள்ளும் கெண்டை
மீனுக்கு இந்தப் பெண்ணின்
முகத்திடம் வேலை என்ன?
மான்விழி இவள் விழிக்குள்
இருட்பதேன?' என்று எண்ணி
தேன் பார்த்தான், பேச்சில், ரேகைத்
தொழில் பார்த்தான் பார்வையாலே.''

கன்னியின் அழகு முகம் புதியதொரு ஐயத்தைத் தருகிறது ஆருடக்காரனுக்கு...

நிலத்திலே நிலாவிழுந்து
விட்டதா? முகமா? இவ்வூர்க்
குளத்திலே பூத்திருக்கும்
தாமரைதானோ? என்று
தலை தூக்கிப்பார்த்தான், தையல்
தலையை தூக்காதபோது!

சுரதாவின் கவிதைகளில் சில 'காதல் பிரபந்தங்களை'ப்போல சுவை தருகின்றன. இலட்சிய நிறைவு, சிருங்கார வர்ணனை, வளமான மொழி நடை இத்தனையும் இவர் தரும் சித்திரத் தமிழிலே நிறைந்திருக்கின்றன. அள்ள அள்ளக் குறையாத உவமைச் செல்வத்தைப் பெற்றவர் சுரதா. இதனாலேயே அவர் 'உவமைக் கவிஞர்' என அழைக்கப் படுகிறார். வரிக்கு வரி உவமைகளை அடுக்கி கவிதைகளை பொன்னிறமாக்குவதில் சுரதா இணையற்றவர்.

மேகம் கிழிக்கும் வைரமின்னல் நெறிதேய்ந்த மக்களின் ஆணைபோல் ஆடிற்றும்! கொடிமுல்லையின் அரும்பு கோலத்தின் புள்ளியாம்! பட்டையில் ஊற்றிய பாலென ஓடுகிறதாம் அருவி! இன்னும்...

கோடை வளர்த்த தடுப்பை எல்லாம்
மழையின் வளத்தால் கழித்து; பனியில்
எடுப்பாய்ச் சிரிக்கும் அரசிலை மேலே
அலையும் நரம்புகள் போலக் காட்டு
ஆறு நடந்தது! அருவியும் தன்கை
நீட்டி அழைத்தது! சிவந்த வெள்ளத்து
முகமெலாம் திருமணம்! அகத்தில் பளிச்சிடும்
தோட்டத்துச் சிரிப்பால் தொட்டு, மேனியைக்
கூட்டி முடிந்து குதித்து ஓடின.

ஆற்றின் கிளை பிரிதல் அரசிலையின் நரம்புகளாம்! பிறை நிலவு யானைத் தந்தமாம்! அடுக்கடுக்கான உவமைகள் அத்தனையும் சுவைப்பிழம்பு. எச்சில் முத்தம், வண்டுநிற இருட்டு, வாய் திறவாத அரும்பு—கொம்பு நிலா—சந்தனச் சுவடிக் கன்னம்—இத்தகு சொற்கள் சுரதாவின் எழுத்திலே இடை இடையே வந்து எழிலை நிரப்புகின்றன. பெரிய பிரபந்தங்களை சிறிய சொற்றொடரில் அடுக்கும் ஆற்றலில் கவிஞரின் புகழ் கருவிருக்கிறது.

தமிழ்க் காதலை சுவையாகத் தருபவர் சுரதா. 'முத்துச் சிரிப்புதனை, மூடிவைக்கும் என் உதட்டைக் கொத்துங்கள் அத்தான், வாய்க் கோவைப் பழத்தாலே என்று இளவஞ்சியின் கனவில்தான் எத்தனை சுவைத் தேக்கம்,

முல்லைக்கு ஏதடி உன் சிரிப்பு!—கடல்
முத்துக்கு ஏதடி உன்மதிப்பு!—வான
வில்லுக்கு ஏதடி உன்அழகு—கெண்டை
மீனுக்கு ஏதடி உன்துடிப்பு—தமிழ்ச்
சொல்லுக்குத்தான் உண்டோ உன்இனிமை என்று
சொல்லி முடிக்கும் சமயத்திலே—அவள்
கொல்லிமலை மார்பில் சாய்ந்து விட்டாள்!
...............................அவள்
ஊரே உறங்குது என்று சொன்னாள்—அவன்
ஓராயிரமுத்தம் வேண்டுமென்றான்—அவன்
கூரான கண்ணை சிவக்க வைத்தாள்—அவள்
கோவை உதட்டை வெளுக்க வைத்தான்—நோய்
தீராத சந்திரன் தொங்கையிலே—நோய்
தீர்ந்தனர், தூங்கினர், தோட்டத்திலே!

பாடலின் இறுதியிலே சொற்களை சதுராட விட்டு புதிய சோபிதத்தை படையலாக்குகிறார் சுரதா. இதுபோன்ற எளிய இனிய வரிகள் அவருக்கே உரியவை. இலட்சியங்களுக்காக கவிதை எழுதியோரின் பரம்பரையினரில் பாரதி மூதத பிள்ளை—பாரதிதாசன் அந்த பாணிக்கு மெருகும் மேன்மையும் வழங்கினார். சுரதா பிரசாரத்தின் எல்லையை விரிவாக்கும்போது பாடல்கள் வெறும் சொற்களாகவே ஒலிக்கின்றன. கவிஞரின் உணர்ச்சிகள் ஏனோ தேய்ந்துவிடுகின்றன! நீண்டகவிதைகளை தவிர்த்தால் இந்த பிழை மறைந்துவிடும். நேர்மாறாக சின்னஞ்சிறு கவிதைகளிலே இலட்சியம் இழைக்கப்படும்போது அவை மிகுந்த எழில் பெறுகின்றன.

தளபதியைத்; தமிழ்மகனை; இலங்கை தந்த
தங்கத்தை, இராவணனை; அறிஞர் எல்லாம்
வளையாத வெறறிகண்ட வீரன் என்று
வருணிக்க அதை மறுத்து, அரக்கன் என்றும்
ஒளிவீசும் கடல்முத்தை, வெண்சுண்ணம்பின்
உருண்டை என்றும்; பழிக்கின்றான் பார்ப்பான்
[இந்த
இளக்காரப் பேச்சுதனைக் கேட்டுக் கொண்டு
இருக்காதே; இருக்காதே, அடக்கு வாயை!

இத்தகு சில அழகிய கவிதைகளை சுரதாவின் இலட்சிய மனம் நமக்குத் தந்திருக்கிறது. உணர்ச்சியின் வேகமும் அதுதரும் சுவையும் வாழ்த்துதற்குரியது.

●

கவிதை எழுதும் எல்லோரிடமும் வசன இலக்

11-ம் பக்கம்

ஆசிரியர், அச்சிடுபவர் { வெளியிடுபவர், என். வி. நடராசன், சேரமு அச்சகம் 16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1